உ

முருகா

சிந்தனைத் தேன்

ஆசிரியர்;

கிருபானந்தவாரி

திருப்புகழமிர்தம் காரியாலயம்,
89, சிங்கண்ணசெட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, :: சென்னை-2,

1963

நான்காம் பதிப்பு—1963

உள்ளுறை

திருப்புகழமிர்தம் அச்சகம்,
89, சிங்கண்ணசெட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–2

5-2

உ

முருகா

நூன்முகம்

இறைவனை இடையறாது சிந்தித்தல் வேண்டும். அவ்வண்ணம் சிந்திப்பார் சிந்தனையில் இறைவன் தேனூற நின்று இனிமை செய்வான்.

''கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று''

என்பது மணிவாசகம்.

இத் திருவாசகத்தின்படி இறைவன் உள்ளுக்குள் தேனாய் இன்னமுதாய்த் தித்தித் தருள்புரிவான்.

தேன் தன்னில் கலந்த பொருளை நெடுநாட்களுக்குக் கெடாமல் வைக்கும் ஆற்றலுடையது. தேன் பல நோய்களை நீக்கவல்லது. இறைவனுந்

தேன் போன்றவன். தன்னை நினைக்கும் அடியவர்க்கு அழிவற்ற தன்மையைத் தந்து பிறவிப் பிணியை மாற்றுவன்.

அப் பரமபதியின் கருணையால் எழுந்தது இந்நூல். வண்டு பல மலர் களிலிருந்து தேனை எடுப்பதுபோல், பலகாலும் பல நூல்களைக் கற்றுங் கேட்டும் சிந்தித்தும் நின்ற சிந்தனையில் ஊறிய கருத்துக்கள் திரண்டு இச் சிறு நூலாக வருகின்றது.

இதனை அமைதியுடன் ஆழ்ந்து படிப்போர் நலமுறுவர்.

அன்பன்,

கிருபானந்தவாரி.

உ

முருகா

சிந்தனைத் தேன்

1. அறிவு

அன்பர்களே!

நாம் தேடுகின்ற மாடு, மனைவி, மக்கள், வீடு, நில புலம், வண்டி, வாகனம், ஆடை, ஆபரணங்கள் முதலிய யாவும், நாம் மரணமடைந்து இந்த உடம்பை விட்டுப் புறப்படும்போது உடன் வரமாட்டா. உடன் வராத இவைகளைத் தேடுவதிலேயே நம் வாழ்நாள் முழுவதும் செலவழிப்பது தக்கதன்று.

நாம் இந்த உடம்பை விட்டுப் புறப்படும்போது நம்முடன் தொடர்ந்து வருவது அறிவு என்ற ஒன்றேயாகும். அறிவு பிறவிகள்தோறும் தொடரும். ஆகவே மற்றப் பொருள்களைத் தேடித் திரிவதோடு நின்றுவிடாமல், நாம் அறிவையும் அவசியம் தேடிப் பெறவேண்டும்.

அறிவு என்ற ஒன்றிருந்தால் அவர்கள் எல்லாம் உடையவர்களாவார்கள். பொன்னிருந்தும், வீடு இருந்தும், மாடு இருந்தும், மனைவி மக்கள் இருந்தும், பிற என்ன இருந்தும் அறிவு என்ற ஒன்றில்லையானால் அவர்கள் அவமதிக்கப்படுவார்கள்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்கின்றார் திருவள்ளுவதேவர்.

நாம் பலவகையான கருத்து வேற்றுமைகளை யுடையவர்களாக இருக்கின்றோம்; நாடு, மொழி, தொழில், சமயம், மதம், நடை, உடை, பழக்கவழக்கம் இவைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றார்கள்.

ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் எல்லோருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. அது எது? "துன்பந் தொலையவேண்டும்; இன்பம் பெருகவேண்டும்" என்றுதான் எல்லோரும் எண்ணுகின்றார்கள்.

'துன்பத்தை நீக்கவேண்டும்; இன்பத்தை ஆக்கவேண்டும்' என்று சகலருங் கருதுகின்றார்களே யன்றி அதன் காரண காரியத்தையறிந்து முயல்கின்றார்களில்லை.

துன்பத்திற்குக் காரணம் அறியாமை.

இன்பத்திற்குக் காரணம் அறிவு.

அறியாமை தேயத் தேய துன்பம் தொலையும்; அறிவு வளர வளர இன்பம் வளரும். இந்த நுட்பத்தை யறியாமல் பலர் பொன்னாலும் பொருளாலும் இன்பத்தை வளர்க்க நினைக்கின்றார்கள். அது நெருப்பை நெய்யினால் அவிக்க முயல்வதை நிகர்க்கும்.

மிகுந்த பொன்னும் பொருளும் உடையவர்கள் சதா சிந்தாகுலத்துடன் உழல்வதையும், ஆறுதல் இன்றி அல்லலடைவதையும் கண்கூடாகக் காண்கின்றோம்.

அறியாமை யகன்றாலன்றி துன்பந் தொலையாது என்று முன்னே கண்டோம். அறியாமையாலேயே துன்பங்கள் வருகின்றன என்றும் அறிகின்றோம்.

ஒரு விறகுவெட்டி ஒரு மரத்துண்டைப் பாதி பிளந்துவிட்டுப் பிளந்த பிளப்பில் ஒரு ஆப்பை வைத்துவிட்டுச் சென்றான். மறுநாள் வந்து மற்றப் பாதியைப் பிளக்க எண்ணினான். அதற்கு அனுகூலமாகவே அம்மரத் துண்டில் ஆப்பு வைத்தான்.

ஒரு குரங்கு அங்கு வந்து அம் மரத்தின் பிளப்பில் தன் காலை நுழைத்துக்கொண்டு, தான் பெரிய செயலைச் செய்வதாக நினைத்து, அந்த ஆப்பை அசைத்து அசைத்து அரும்பாடு பட்டுப் பிடுங்கி எடுத்தது. மரத்தின் பிளப்பு நெருங்கி ஒன்றுபட்டதனால் அதன் கால் அகப்பட்டுக்கொண்டு அக்குரங்கு துன்புற்றது. அதன் அறியாமையாலே இந்த அல்லல் எய்தியது.

"கவர்பிளந்த மரத்தொளையில் கால்நுழைத்துக்கொண்டே
ஆப்பதனை அசைத்து விட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர்"

என்று அழகாகக் கூறுகின்றார் பட்டினத்துசுவாமிகள்.

ஆகவே அறியாமையை அகற்றினால் துன்பந் தானே அகலும்.

இனி அறியாமையை அகற்றி அறிவை வளர்க்க வழி யாது என்றால் சிறந்த அறிவு நூல்களைப் படிக்குந்தோறும் அறியாமை தேய்ந்து அறிவு வளரும்.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

என்கின்றார் திருவள்ளுவர்.

ஆதலால் அறிவு நூல்களை ஒவ்வொருவரும் விரும்பி ஓதி உணரவேண்டும். அறிவு நிறைந்த ஆன்றோர்களுடன் நாள்தோறும் சில நிமிஷ நேரமாகிலும் பழகவேண்டும்.

'இனிது இனிது அறிவுள்ளோரைக்
கனவிலும் நனவிலுங் காண்பதுதானே'

என்று ஔவையார் அருளிச்செய்தார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் அறிவு நூல்களை ஓதியும், அறிஞர்களோடு பழகியும், அறியாமையை அறவே களைந்து அறிவை நிரம்பப் பெற்று, துன்பத்தினின்றும் நீங்கி இன்பமயமாக ஓங்கி உய்வோமாக.

உ

முருகா

2. துணை

அன்பர்களே!

நாம் ஒவ்வொருவரும் பிரயாணத்திலேயே யிருக்கின்றோம். நாம் தூங்கும்போதும், இருக்கும்போதும் பிரயாணம் நடந்துகொண்டேதான் இருக்கின்றது. அந்தப் பிரயாணம் விரைவாகவும் போய்க்கொண்டிருக்கின்றது. "சாமாறே விரைகின்றேன்" என்பார் மணிவாசகர், நெடுந்தூரம் போகின்றவர்கள் நல்ல துணையுடன் போவது நல்லது. "துணையோடல்லது நெடுவழி யேகேல்" என்கின்றார் ஔவையார்.

நாம் தக்கவர்களைத் துணை பற்றினால் எல்லா நலன்களும் உண்டாகும். பாலமில்லாத ஒரு நதியைக் கடக்க எண்ணிய ஒருவன், தனது காளைமாட்டை நதியில் நீந்த விடுத்து அதன் வாலைப் பற்றிக்கொண்டான்: பயமின்றி அக்கரை சேர்ந்தான். அதைக் கண்ட ஒரு பேதை தான் கையில் சங்கிலியுடன் பிடித்திருந்த நாயை நதியில் நீந்தவிட்டு அதன் வாலைப் பற்றினான். நாயும் அவனும் நதியில் ஓடுகின்ற தண்ணீரில் மாண்டார்கள். அதுபோல் சிறியாரைத் துணை பற்றியவன் பிறவியலையாற்றைக் கடக்க மாட்டாது துன்புறு

வான்; அறிவும் அனுபவமும் மிகுந்த ஆன்றோர்களைத் துணைபற்றியவன். பிறவியலையாற்றைக் கடந்து இன்பமுறுவான். ஆதலினால் ஔவையார் "பெரியாரைத் துணைகொள்" என்று கூறியிருக்கின்றார்கள்.

பெரியார் என்றால் யார்? உடம்பினாலே, உயரத்தினாலே, தனத்தாலே, அழகாலே, பக்தியினாலே, படிப்பினாலே உயர்ந்தவர்கள் எல்லோரும் பெரியார்கள் தானா? இல்லை. செயற்கரிய செய்பவர்களே பெரியவர்கள்.

> செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார். —திருக்குறள்.

இனி அப்பெரியவர்களைத் துணைகொண்டு அவர்களை நம்மவராகக் கொண்டு வாழ்வதே மேலான தன்மை.

> அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
> பேணித் தமராக் கொளல். —திருவள்ளுவர்.

அப் பெரியவர்களுள் தலையாயவன் இறைவன். அவனையே "பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என்கின்றார் அப்பரடிகள்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை யிலாதான்; தனக்குவமையில்லாதான்; அறவாழி அந்தணன்; அப் பரமபதி பொதுவாக எல்லாருக்கும் அருந்துணையாக இருக்கின்றான். சிறப்பாகத் தன்னையடைந்த அடியார்கட்குப் பெருந்துணையாக இருந்து அருள் புரிகின்றான்.

அருந்துணையை அடியவர்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

என்றார் அப்பரடிகள்.

ஆகவே மரணயாத்திரையில் சென்றுகொண்டிருக்கின்ற ஆன்மாக்கள் இறைவனைத் துணையாகக் கொள்ளவேண்டும்.

இறைவன் ஆன்மாக்களுக்கு வரும் இடையூறுகளை நீக்கி, அவ்வப்போது ஆவன அறிந்து செய்வான்.

"கனத்த செந்தமிழால் நினையே தினம்
நினைக்கவும் தருவாயுன தாரருள்
கருத்திருந்துறைவாயென தாருயிர் துணையாக"

என்கின்றார் அருணகிரிநாதர்.

சகுனியைத் துணை பற்றினான் துரியோதனன்; குலத்துடன் அழிந்தான். கண்ணபிரானைத் துணை பற்றினான் அருச்சுனன்; எல்லா நலன்களையும் பெற்றான்.

பதினான்காவது நாள் போரில் துரியோதனனுக்குத் துணையாக வந்த வருணராஜகுமாரன் சுதாயு என்பான், தனஞ்சயனைக் கொல்லும்பொருட்டு, தன் தந்தை தனக்குத் தந்த சிறந்த வஜ்ரகதாயுதத்தை விடுத்தான். அர்ச்சுனன் அக்கதையை அழிக்க ஆயிரம் பாணங்களை விடுத்தான். அப் பாணங்களை யெல்லாம் அக் கதாயுதம் அழித்து அவனை நோக்கி வந்தது. அமரர்கள் அஞ்சினார்கள்; அர்ச்சுனனும் கலங்கினான். அக்கதாயுதம் அர்ச்சுனன் அருகில் வந்ததும் அவன் தேரைச் செலுத்துகின்ற கண்ணபிரான், தேர் ஓட்டுகின்ற கோலைக் கீழே வைத்துவிட்டு தன் மார்பைக் காட்டினார். கதை கண்ணன் மார்பில் மலையில் இடி விழுவது போல் பட்டது. அதை விடுத்த சுதாயுவின் தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து மாண்டான். கண்ணனை வணங்கிக் காரணம்கேட்டான் அர்ச்சுனன். "நிராயுதன் மீது இக் கதையை விடுத்தால் உன் தலை வெடிக்கும்'' என்று இவன் தந்தை கட்டளையிட்டிருந்தான். அதனால் இவ்வாறு நிகழ்ந்தது'' என்று கண்ணபிரான் கூறினார். அர்ச்சுனன் அகமகிழ்ந்தான்.

ஆதலால் நாம் எப்போதும் பெரியவர்களைத் துணைகொண்டு இன்புறுவோமாக.

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. —தமிழ்மறை.

———

உ

முருகா

3. நன்மை செய்

அன்பர்களே!

கடவுதல் என்றால் செலுத்துதல் என்று பொருள். உலகங்களையும் உயிர்களாகிய நம்மையும் செலுத்து கின்றபடியால் இறைவனுக்குக் கடவுள் என்ற பேர் ஏற்பட்டது. நம்மையெல்லாம் செலுத்துகின்றவர் கடவுள். ஒரு வண்டியைச் செலுத்துகின்றவன் வண்டிக்குள் இருந்து செலுத்துவதுபோல் கடவுள் உயிர்க்குயிராக இருந்து செலுத்துகின்றார்.

கண்ணால் காணமாட்டாமையால் கடவுள் இல்லை என்று கூறக்கூடாது. இந்த உடம்பிலே யுள்ள உயிரை நாம் எப்போதாவது கண்ணால் கண்ட துண்டா? காணமாட்டாமையால் நாங்கள் உயிரில்லா தவர்கள் என்று கூறினால் உலகம் சிரிக்குமல்லவா? உடம்புக்குள் உயிரும் உயிருக்குள் இறையும் உறை கின்றன.

ஆகவே கடவுள் உயிர்கள் தோறும் உறைகின் றார். ஒன்றாகி உடனாகி வேறாகி யிருக்கின்றார். எவ் வுயிரும் பராபரன் சந்நிதியதாகும். ஆதலால் எல்லா

உயிர்கட்கும் நாம் நன்மையே செய்யவேண்டும். உயிர் களுக்குச் செய்யும் நன்மை கடவுள் வழிபாடாகும்.

உயிர்களுக்கு வருகின்ற இடர்களை முடிந்தவரை நீக்கியும் நன்மை புரிந்தும் மகிழவேண்டும். அதுவே அறிவு படைத்ததன் பயனுமாகும்.

'அறிவினா ளாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக்கடை'

என்கின்றார் திருவள்ளுவர்.

இனி கடவுள் எங்குமிருக்கின்றார் என்பதனையும் மறவாமல் கருத்தில் இருத்தவேண்டும்.

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணா னந்தமே"

என்கின்றார் தாயுமானார். இந்த எண்ணம் இடை யறாது உள்ளத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும். ஆண்டவன் நம் உள்ளத்தில் இருக்கின்றா னாதலி னாலும், நாம் செய்யும் தீமைகட்குத் தண்டனை தரு வோன் அவனே யாதலினாலும், நாம் அவனையன்றிப் பிரிந்திருக்க முடியாமையாலும் நாம் தீமைகளை நினை யாமலும் சொல்லாமலும் செய்யாமலும் இருக்க வேண்டும். ஜீவசாட்சியாக இருந்து இறைவன் நம் எண்ணங்களை யெல்லாம் அறிகின்றான்; நாம் பேசும் பேச்சுக்களை யெல்லாம் கேட்கின்றான்; நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் காண்கின்றான். ஆதலினால் நாம் நல்லனவே நினைந்து, நல்லனவே பேசி, நல்லனவே செய்யவேண்டும்.

இனி, நாம் பிறர்க்குத் தீங்கு செய்வோமானால் அது நமக்கேதான் செய்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது. பிறருக்குச் செய்யும் நன்மையும் தீமை யும் நமக்குத் திரும்ப வருகின்றன.

'நன்மையுந் தீமையுந் தான்தர வருமே'

வினை அறிவில்லாத சடம். ஆதலின் தானே வந்து நம்மைச் சாராது. நாமும் சிற்றறிவுடையோ மாதலின் நாமும் செய்த வினையை யறிந்து அடைய வல்லோமல்லோம். ஆதலின் முற்றறிவும் பேராற்ற லும் படைத்த பரம்பொருளாகிய கடவுள் அவரவர்கள் செய்த வினைகளை அவரவர்கட்குக் காலம் இடம் அறிந்து ஊட்டுகின்றார்.

இனி நாம் செய்த நல்வினை தீவினை செய்த அளவே வரா. ஒன்று ஆயிரமாகப் பெருகிவரும். வயலில் இட்ட விதை ஒன்று பலவாக வருவது போல், வினை களும் பன்மடங்கு வளர்ந்துவரும்.

ஒரு முனிவருடைய ஆசிரமத்தில் வேறு ஒரு முனிவர் உணவு உண்டுகொண்டிருந்தார். அம் முனிவ ருடைய சின்னஞ் சிறு மகன் விளையாட்டாக முனிவ ருடைய உணவில் ஒரு சிறு கல்லை எறிந்தான். முனிவர் அதனை அறியாது உணவு அருந்தினார்.

பின்னர் முனிவர் புதல்வர் சகல நூல்களையுங் கற்று அரிய பெரிய தவஞ் செய்து மா தவசிகாமணி யாக ஆனார். இவர் ஒருமுறை தற்செயலாக அறக் கடவுளுடைய உலகஞ் சென்றார். அங்கு ஒரு குன்றம் இருக்கக் கண்டார். "இது என்ன" என்று அறக்

கடவுளை வினவினார். "இது நீர் சிறு பிள்ளையாக இருந்தபோது ஒரு முனிவர் உணவில் எறிந்த கல்; இங்கு வளர்ந்துகொண்டே யிருக்கின்றது. இதை நீர் இங்கு வந்து உண்ணுதல் வேண்டும்'' என்றார்.

அதைக் கேட்ட முனிவர் நடுங்கிப் பூவுலகம் வந்து அக்குன்றுக்குச் சமானமான ஒரு குன்றைப் பிளந்து சிறு துண்டுகளாக்கி அவற்றை இடித்துக் கரைத்து நாடோறுங் குடித்து முடித்தார். நரக வுலகில் இருந்த கல் கரைந்துவிட்டது. சிலையையே உணவாகக் கொண்டதனால் அவர் சிலாதனர் எனப் பட்டார். அவர் செய்த புத்ரகாமேஷ்டி யாகத்தில் அவதரித்தவர் திருநந்திதேவர்.

ஆகவே நாம் சிறு பாவங்களையுஞ் செய்யக் கூடாது.

எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்று எண்ணி உயிர்களுக்கு நன்மையே செய்து நலம்பெற வேண்டும்.

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

—தாயுமானார்

உ

முருகா

4. தருமம்

அன்பர்களே!

நாம் அயலூரிற் சென்று ஈட்டிய பொருளை அங்கிருந்து வரும்போது உடன் கொண்டுவராமல் அங்கேயே வைத்துவிட்டு வர விரும்புவோமா? அதுபோல் இவ்வுலகில் தேடிய பொருளை, இவ்வுடம்பு விட்டுப் புறப்படும்போது உடன்கொண்டு போகாமல் இங்கேயே வைத்துவிட்டுப் போவது அறிவுடைமையாகாதல்லவா? பொருள் உடன் வரவேண்டுமாயின் என்ன செய்யவேண்டும்? பொருளை வறியவர்க்கீந்து தருமம்புரிந்து அருளாக மாற்றிவிடவேண்டும். அருள் அந்தவுலகத்திற்கு வரும். மறுபிறப்பிலும் அருளால் நாம் இன்புறுவோம்.

''எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்டது''

என்கின்றார் அருணகிரிநாதர். இங்கு நாம் ஏற்பவர்க்கிடுவோமானால் மாண்டு எந்த வுலகத்திற்குச் சென்றாலும், மீண்டு எந்தத் தேயத்திற் பிறந்தாலும் அங்கு இப் புண்ணியத்தின் பயன் வரும்.

வறியவர்கட்கு வழங்கி அவர்கள் இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற வேண்டும். ''ஈத்துவக்கும்

இன்பம்" என்பார் திருவள்ளுவர். அங்ஙனம் ஈந்தவரே வாழ்ந்தவர்; ஈயாதார் மாய்ந்தவரே யாவார். "ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சியேகம்பனே" என்று இறைவனையே கேட்கின்றார் திருவெண்காடர். இரப்பவர்க்கீயாமல் கரப்பவர்கட்காகவே கடுநரகங்களை இறைவன் உண்டாக்கினாரும்.

'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்'
—அப்பர்

"காசுதேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்
மாறிலாத மாகால னூர்புக் கலைவாரே"
—அருணகிரிநாதர்.

ஈயார்க்கு இம்மையில் இகழும், மறுமையில் பாவமும் எய்தும்; "ஈபவர்க் கருளும் வைத்தார்" என்றதனால் தருமஞ் செய்வோர் இம்மையில் புகழும் மறுமையில் புண்ணியமும் எய்துவர்.

வறியார்க்கு இரக்கமுடன் ஈந்தால் அது மீண்டும் ஒன்றுக்கு நூறாக நம்பால் வருகின்றது. வாணிபத்திலும் விவசாயத்திலும் பெரும்பயன் வரும். "விருந்தோம்புவோனிடம் அகனமர்ந்து செய்யாளுறைவள்" என்று வள்ளுவர் வகுத்துரைத்தார். வறியார்க்கு ஈந்தால் அது எப்படி வாணிபத்தில்—விவசாயத்தில் வரும்? இங்கு தந்தது அங்கு எப்படி வரும்? என்ற ஐயம் ஏற்படலாம். பசுவுக்கு அகத்திக் கீரை, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, பசும்புல் இவைகளை வாயிலே தருகின்றோம். மடியிலே படிக்கணக்காகப் பால் பெறுகின்றோம். தந்தது வாயில்; பெற்றது மடி

யில். அதுபோல் வறியவர்க்குப் பயன் கருதாமல் சிவார்ப்பணமாகச் செய்தது, ஒன்று கோடியாகப் பெருகிவரும் என்று உணர்க.

ஒரு அவரை விதையை மண்ணில் போடுகின்ருேம். ஆயிரக்கணக்கான அவரைக்காயைப் பெறுகின்ருேம். தென்னேக்குத் தண்ணீரை விட்டு இளநீரைப் பெறுகின்ருேம். இவைகள் கண்கூடு.

காரைக்காலம்மையார் வந்த அடியாருக்கு மதுரக் கனி தந்து, இறைவனிடம் அதிமதுரக்கனி ஒன்றுக்கு இரண்டு பெற்ருர்கள்.

பாண்டவர்கள் வாழும் இந்திரபிரஸ்தத்திற்கு ஒரு சமயம் கண்ணபிரான் வந்திருந்தார். அரண்மனேயில் உள்ள தாமரைத்தடாகத்தில் பாண்டவர்களும் கண்ண பிரானும் நீராடி நீந்தி விளேயாடினுர்கள். திரௌபதி ருக்மணி சத்யபாமை சுபத்திரை முதலியோர்கள் கரையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

உச்சி நேரத்தில் எல்லோரும் கரையேறினுர்கள். எல்லோரையும் பிறவிக்கடலினின்றுங் கரையேற்று கின்ற கண்ணன் மட்டுங் கரையேறவில்லே. கழுத் தளவு தண்ணீரிலேயே முழுகி யிருந்தார். தருமர், 'கண்ணு! உணவு நேரம் வந்துவிட்டது; பெண்கள் காத்துக்கொண்டுள்ளார்கள். கரையேறு' என்ருர். அவர் கரையேறவில்லே. பீமன் முதலியோரும் வேண் டினுர்கள். அவர் அசைவற்று இருந்தார். காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லே. திரௌபதியின் நுண் ணிய அறிவில் காரணம் விளங்கியது. பளீர் என்று

தன் புடவையின் முன்தானையில் சாணளவு கிழித்துச் சுருட்டிக் கண்ணபிரானிடம் வீசிஎறிந்தாள். கண்ண பிரானுக்குக் கௌபீனம் தவறியது. பெண்கள் கரையில் இருப்பதனால் சொல்லவோ வெளிப்படவோ இயலாமல் தவித்தனர். ஏன்? முன் சில பெண்களைத் தண்ணீரில் ஆடையின்றி அல்லற்பட விடுத்தார். முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும். அதனால் அவர் இப்போது ஆடையின்றி அல்லற்பட்டார். அக்குறிப்பறிந்து திரௌபதி சாண்புடவை கொடுத்து உதவினாள்; அதனை யுடுத்து பகவான் கரையேறினார். திரௌபதி தொழுதாள். "அம்மா! இன்றுசாண்புடவை தந்து என் மானங் காப்பாற்றினாய்; சமயம் வந்தால் உனக்குக் கோடி புடவை தந்து மானங் காப்பாற்றுவேன்" என்று அருள்புரிந்தார். அதுபடியே திரௌபதிக்கு மானசம்ரக்ஷணம் புரிந்தார். ஆகவே நாம் செய்த தருமம் ஒன்றுக்கு ஆயிரமாகவும் லட்சமாகவும் கோடியாகவும், செய்த பாத்திரத்திற்குத் தக்கபடி நம்பால் வரும்.

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. —திருக்குறள்.

தான்சிறிதே யாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும் —நாலடியார்.

எனவே நாம் கைத்துண்டாயபோது கரவாது அறஞ்செய்து உய்வோமாக.

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை —தமிழ்மறை.

---

5. துன்பம்

அன்பர்களே!

துன்பத்தைக் கண்டு அஞ்சாதவனே இன்பத்தை யடைவான். இன்பமாகிய மாளிகைக்குத் துன்பம் ஒரு வாயில் போன்றது. வாயிலில் நுழையாது ஒரு மாளிகைக்குப் போக முடியாது. அதுபோல் துன்பம் எய்திலொழிய இன்பம் எய்தாது. துன்பம் வருகின்றபோது அதை அஞ்சாது வரவேற்பவனே தீரன்.

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்பதில்'

என்று கூறுகின்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவனார்.

நளனும், அரிச்சந்திரனும், இராமரும், பாண்டவர்களும் அளவற்ற துன்புற்றதனால், எல்லையில்லாத புகழும் இன்பமும் அடைந்தார்கள்.

இனி தட்டுதல், அராவுதல், வளைத்தல் முதலிய துன்பத்தை யடைந்த தங்கம் ஆபரணமாகி அழகு பெறுவதோடு பிறருக்குப் பயன்படுகின்றது. வளைப்

பதனால் துன்புற்ற மூங்கில், பல்லக்கில் மன்ன னுடைய மணிமகுடத்திற்கு மேல் இருக்கும் மேம்பா டடைகின்றது.

பசி, தாகம், வெயில், மழை இவைகளைப் பொறுத் துத் தவஞ் செய்தவர்கள் அருளைப் பெறுகின்றார்கள்; இரவு பகலாக ஓடி உழைத்துத் துன்புற்று விவசாய மும் வியாபாரமும் செய்தவர்கள் பொருளைப் பெறு கின்றார்கள். துன்புற்றாலன்றி அருளும் பொருளும் எய்த மாட்டா.

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு'

என்பது பொதுமறை.

துன்பம் மூன்று வகையாக வரும்; பாம்பு, தேள், பகைவர் முதலிய உயிர்கள் மூலம் வருவது ஆதி யான்மிகம்; தண்ணீர், நெருப்பு, இடி, மழை, காற்று, குளிர் முதலியவைகளால் வருவது ஆதிபௌதிகம்; நோய் முதலியவைகளால் வருவது ஆதி தைவிகம். இவ்வாறு வருந் துன்பங்கள் நாம் முற்பிறப்பில் செய்த வினை காரணமாகவே வருகின்றன. அவைகளை நாம் பொறுமையுடன் அநுபவித்தாலொழிய அவை தீர மாட்டா. கருவுற்ற ஒருத்தி துன்புற்று மகவு பெற்றே தீரவேண்டும். அதுபோல் உடம்பு முகந்துகொண்ட வினைகளைத் துய்த்தே தீரவேண்டும்.

அன்றியும் பிறருக்கு நாம் உதவி புரிய வேண்டு மானால் துன்புற்றுத்தானாகவேண்டும். உழுவதனால் துன்புறுகின்ற பூமி பயிரையும் அதன் மூலம் தானி

பத்தையும் நமக்குத் தருகின்றது. திரி எரிந்து வேதனையுற்று நமக்கு ஒளியைத் தருகின்றது. ஆகவே இன்பம் விழையாது உழைத்துத் துன்பத்தை வர வேற்றுத் தொழில் புரிகின்ற ஒருவன் தன் உறவின ருடைய துன்பத்தை நீக்கி உறுதி செய்கின்ற தூண் போன்றவனாவான்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். --திருக்குறள்.

கடவுளை நம்பி நன்னெறியில் நிற்பார் சில சம யம் துன்புறுகின்றார்கள். கடவுள் நம்பிக்கையின்றி புன்னெறி நிற்பாரில் பலர் இன்புறுகின்றார்கள். என்ன காரணம்?

காலில் முள் தைக்க வேதனையுறும் புதல்வ னுடைய தந்தை, பெரிய முள்ளை யெடுத்துக் குத்தி மேலும் வேதனை தந்து வேதனையை நீக்குகின்றார். அழுக்குடைய உயர்ந்த ஆடையைக் கல்லிலே அடித் துத் துன்புறுத்தி அழுக்கு அகற்றுகின்றனர். சிலந்தி வந்து துன்புறுவானை வாளால் அறுத்துச் சுட்டு மருத் துவன் அதனை நீக்குவான். அதுபோல் இறைவன் நம்மிடமுள்ள ஆணவ மலத்தை யகற்றி இன்பத்தைப் பாலிக்கும்பொருட்டு நம்மை நையவைப்பார். அது கருணையின் விளைவு என்று அறிக.

ஒரு மன்னன் பாக்குவெட்டியால் பாக்கை வெட்டுகின்றபோது அவன் பெருவிரல் அகப்பட்டு வெட்டுப்பட்டது. அவன் துன்புற்றுத் துடித்தான். மதிநலம் படைத்த மந்திரி, "மன்னரே! இதுவும் ஒரு

நன்மைக்குத்தான். எல்லாம் திருவருள்" என்றான். மன்னனுக்குச் சினம் மூண்டது. "விரல் போனது நன்மைக்கா? ஆனால் உனக்குச் சிறைத் தண்டனை விதித்துளேன்" என்றான். அமைச்சன் "அதுவும் என் நன்மைக்கே" என்று கூறி சிறை புகுந்தான்.

மறுநாள் மன்னன் வேட்டையாடக் கானகம் போனான். வேடர் வில்லியர் மெய்க்காவலர் அனைவருந் தொடர்ந்து சென்றார்கள். உச்சி நேரத்தில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டது. அனைவரும் அஞ்சி ஓடிவிட்டார்கள். மன்னன் சிங்கத்தை எதிர்த்துப் போராடிக் கொன்றான். பின்னர் மன்னன் தனியே செல்லும்போது மலைவாழ் காடவர் சிலர் பின்புறம் வந்து அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டுபோய் தாம் புரியும் விழாவில் தமது தேவதையின் முன் நிறுத்திப் பலியிடுவதற்காக வாளை ஓங்கினார்கள். அக்காடவர் தலைவன் இடைமறித்து, "இவன் விரல் வெட்டுப்பட்டுள்ளது. அங்கம் பழுதானவனை நம் தேவதைக்குப் பலியிடக்கூடாது" என்று தடுத்து விடுவித்தான். மன்னன் மகிழ்ந்து நகரம் வந்தான். அமைச்சன் அறவுரையை உன்னி உவந்தான். அவனை யழைத்து நிகழ்ந்ததை யுரைத்து, "இவ்விரல் வெட்டுப் படவில்லையானால் என் தலை போயிருக்கும். என் நன்மைக்கு இது நிகழ்ந்தது. சிறைத் தண்டனையால் உனக்கு என்ன நன்மை விளைந்தது?" என்று வினவினான்.

"வேந்தே! எல்லோரும் ஓடி ஒளிந்தவாறு சிங்கத்திற்கு முன் நான் ஓடி ஒளியேன். உம்முடன்

இருந்து துணை புரிந்திருப்பேன். காடவர்கள் என்னை யுங் கட்டிக்கொண்டு போயிருப்பார்கள். விரல் வெட்டுப்பட்ட உம்மை விடுவித்து விரல் வெட்டுப் படாத என்னைப் பலியிட்டிருப்பார்கள். அதனுல் என் நன்மைக்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட் டது'' என்ருன். மன்னன் கேட்டுத் தெளிவு பெற் ருன்.

ஆகவே உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறு கண் செய்யாது உதவியே புரிந்து உயர்வு பெறுவோ மாக.

'இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படா அ தவர்' --தமிழ்மறை.

௬. சுகம்

அன்பர்களே !

சுகத்தை எல்லோரும் விரும்புகின்றார்கள். துக்கத்தை வெறுக்கின்றார்கள். ஆனால் உலகிலே யாராவது சுகமாக இருக்கின்றார்களா? அரசன்முதல் ஆண்டிவரை எல்லோரும் துக்கமயமாகத்தான் இருக்கின்றார்கள். வாழ்விலே சுகம் என்பது அணுவளவும் இல்லை. மனைவி மக்கள் நிலம் வீடு செல்வம் பதவி இவைகளைச் சுகம் என்று பிறழவுணர்ந்து, இவைகளை யீட்டுவதிலேயே வறிதே வாழ்நாளைக் கழித்து மாய்கின்றார்கள். மனைவி, மக்கள், செல்வம் இவைகளால் சுகத்தை நாடுவது, கல்லைக் கட்டிக்கொண்டு நீந்துதற்குப் பழகுவதையொக்கும். "தாலி கட்டையிலே தொடுத்து நடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலைதானே". "மதலையைப் பெறு நாள் துன்பம் வளர்த்திடு நாளும் துன்பம்". செல்வத்தை ஆக்கும்போதும் துன்பம்; அதனைக் காக்கும்போதும் துன்பம். அதனைச் செலவிடும்போதும் துன்பம். சிலர் மாடமாளிகை, வாகனம், ஆடை அணிகலன்களோடு இருப்பார்கள். தொலைவில் இருந்து பார்த்தால் சுகமாக இருப்பது போல் காட்சி யளிப்பர்; நெருங்கிப் பார்த்தால் துக்கமயமாக இருப்பர். மலையைத் தொலைவிலிருந்து பார்த்தால் மழுமழுப்பாகவும் மரகதக் குவியல் போலும் காணப்படும்; நெருங்கிப் பார்த்தால் கல்லுங் கரடும் முள்ளும் முரடுமாக இருக்கும். ஆதலினாலே துக்கத்

தைப் போக்கி சுகத்தைப் பெறவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? சுகம் எங்கே இருக்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திப்பது அறிஞர் கடன்.

அன்பர்களே!

மனம் அடங்கிய இடத்திலேதான் உண்மையான சுகம் ஊற்றெடுத்து ஓடுகின்றது.

நம்முடைய மனம் ஒரு கணத்திற்குள் பலப்பல நினைவுகளை நினைத்து அங்கும் இங்குமாக அலைகின்றது. காடுங் கரையும் மனக் குரங்கு கால்விட்டு ஓடுகின்றது. "சினமிறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும் மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்கின்றார் தாயுமானார்.

மனம் அடங்குவது மிகக் கடினம். அதிலே உழைத்தவர்க்குத்தான் அதன் அருமை தெரியும். "சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது". நெடுங்காலம், ஜெபம், தியானம் முதலிய அரிய சாதனைகளால் மனதை அடக்கவேண்டும். "தடுங்கோள் மனத்தை ... அருள் தானே உமக்கு வெளிப்படும்" என்ற கந்தரலங்காரத் திருவாக்கை இங்கு உன்னுக.

பூஜையில் அமர்ந்தாலும் சிலசமயம் மனக் குரங்கு தாவிக் குதித்து எங்காவது ஓடும். அதன் தலையில் குட்டி மந்திரமாகிய சங்கிலியால் பிணைத்து உறுதியாகிய தூணிலே கட்டிப் போடவேண்டும். பிறகு அதுவே நன்மனமாகி நமக்கு இனிமையைச் செய்யும்.

"சும்மாயிருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பி என்பேதைமையால்
வெம்மாயக்காட்டில் அலைந்தேன் அந்தோ என்விதிவசமே"

என்கின்றார் தாயுமானார்.

சும்மா இருந்து சுகம் பெற்றவர் அருணகிரிநாதர். அச்சுகம் என்று வருமோ என்று ஏங்கி ஏங்கி இறையருளாற் பெற்றார் இராமலிங்கர்.

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே--துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா யிருக்கும் சுகம்.

நாம் வெய்யிலிலே, மழையிலே, காட்டிலே, மேட்டிலே அலைகின்றபோது துக்கப்படுகின்றோம்; வீட்டிலே வந்து அலைச்சலின்றி அமைதியா யிருக்கின்ற போது சுகப்படுகின்றோம். அதுபோல் கண்டவாறு மனம் அலைகின்றபோது துக்கமே வரும். அவ்வாறு அலைகின்ற மனதை ஒரு புறம் நிறுத்திவைத்தால் சுகமுண்டாகும்.

அழகிய ஒரு தெய்வ இளநல வடிவத்தை இதயத்தில் நிறுவி, உதடு அசையாமல், மனத்திலே அம்மூர்த்திக்குரிய திருமந்திரத்தை வைத்து, அம் மனம் அதனை நினைக்குமாறு செய்தால் மனம் சிறிது சிறிதாக அடங்கிவிடும்.

திருவள்ளுவர் ஒரு சமயம் தனது மாணவர் ஏலேலசிங்கரைக் காண அவருடைய மாளிகைக்குச் சென்றிருந்தார். ஏலேலசிங்கர் பெருந் தனவந்தர்.

வள்ளுவர் வந்த சமயம், அவர் வெள்ளி, தங்கப் பாத்தி ரங்களை வைத்து சிவபூஜை செய்துகொண்டிருந்தார். திருவள்ளுவர் மாளிகைக்கு வெளியில் இருந்தபடியே அவர் வழிபாடு செய்கின்ருர் என்று காவலர் மூலம் அறிந்து வழிபாட்டிற்கு இடையில் குறுக்கிடவேண் டாம் என்று கருதி, வெளித் திண்ணையில் அமர்ந்திருந் தார். ஏலேலசிங்கர் நெடு நேரம் வழிபாடு புரிந்து, முடிந்தபின் வெளியே வந்தார். தனது குருநாதரைக் கண்டு திடுக்கிட்டுவிட்டார். "சுவாமீ! என்ன இப்படி தாங்கள் திண்ணையில் அமர்ந்திருக்கலாமா? உள்ளே வந்திருக்கக் கூடாதா? எப்பொழுது வந்தீர்கள்? உள்ளே வாரும்" என்று வினவினர்.

திருவள்ளுவர். "ஒன்றும் விசேடமில்லை; சும்மா உன்னைக் காண வந்தேன். நீ பூஜையிலிருந்தபடியால் இங்ஙனமே அமர்ந்திருந்தேன்" என்ருர்.

"சுவாமீ! நான் மூன்று மணி நேரம் பூஜை செய் தேனே. தாங்கள் வந்து எவ்வளவு நேரம் ஆகியிருக் கும்" என்று ஏலேலசிங்கர் தாம் அதிகநேரம் பூஜை செய்வதைக் குறிப்பிட்டார்.

திருவள்ளுவர், "அப்பா! நீ திருவல்லிக்கேணி யிலே நூல் கொடுத்த பாக்கி இன்னும் வரவில்லையே; வட்டி நஷ்டமாகின்றதே! என்று எண்ணினையே; அந்த சமயத்தில் நான் வந்தேன்" என்ருர்.

ஏலேலசிங்கர் மனமடங்காத வழிபாட்டை எண்ணி நாணினர். ஆகவே மனத்தை யடக்கி சுகம் பெறவேண்டும்.

உ
முருகா

7. எனது

அன்பர்களே!

'யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்'

என்ற பொய்யா மொழிப்படி யான் எனது என்ற இருவகைப் பற்றுக்களை அறுக்கவேண்டும். முதலில் புறப்பற்றாகிய எனது என்பதை அறுக்க வேண்டும்; பின்னர் யான் என்ற அகப்பற்றை அறுக்கவேண்டும். நமக்குத் தொடர்பில்லாத இவ் வுலகப் பொருள்கள் அனைத்தையும் "என்னுடையது; என்னுடையது" என்று எண்ணி ஒவ்வொருவரும் உயிரை விடுகின்றார்கள். உடம்பை விட்டு உயிர் பிரிகின்றபோது ஒன்றாவது உடன் வருவதில்லை. உலகில் உள்ள பொருள்களில் அளவற்ற பற்று வைத்து, அவைகள் முழுவதும் தனக்கே யாகவேண்டும் என்று விரும்பி ஏங்கி ஏங்கி இளைத்து அயர்கின்றனர்.

"எனதி யானும் வேறாக எவரும் யாதும் யானாகும்
இதய பாவனாதீதம் அருள்வாயே"

என்ற அருணகிரிநாதருடைய அமுதவாக்கு மனிதனைப் புனிதனாக்குகின்றது.

எல்லாவற்றையும் இறைவனுடைய பொருள்களாக எண்ணி அமையவேண்டும்.

அளவற்ற நிலம் உடையவனே யாகுலும் அவன் உண்பது காற்படி அரிசிதானே; பல வீடுகள் ஒருவனுக்குச் சொந்தமாக இருப்பினும் அவன் படுப்பது ஆறடி நீளமுள்ள இடத்தில்தானே.

நம என்ற சொல்லுக்குப் பொருள்: ம—என்னுடையது; ந—இல்லை. நம—என்னுடையது இல்லை. நம நம என்று இறைவன் திருவடியில் மலரிட்டு அர்ச்சிப்பது எனதன்று என்று தற்போதத்தை இழப்பதற்காகவே என அறிக. ஒரு பொருள் தன்னுடையதன்று என்று எண்ணுவோர்க்கு அப் பொருள் தன்னை விட்டு விலகும்போது மனக் கவலை வராது.

'யாதனில் யாதனில் நீங்கியான் நோதல்
அதனில் அதனில் இலன்'

என்பார் திருவள்ளுவர்.

ஆதலால் பற்றற்றவனே பரம ஞானி. அவனுக்கு இன்பமும் துன்பமும் எய்தமாட்டா.

''பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்'' —மணிவாசகர்.

''மற்றுப்பற் றெனக் கின்றிநின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்'' —சுந்தரர்

'மனைவி மக்கள் வீடு வாசல் நிலபுலங்களுடன் கூடி யிருப்பினும், அவைகட்கும் நமக்கும் தொடர்பில்லை' என்று, ஜனகர் மாதிரி—தாமரை யிலைத் தண்ணீரைப்போல் வாழவேண்டும்.

எனது என்ற பற்றுள்ளவனுக்கு மேலுலகத்தில் இடமில்லை.

சிலர் இந்த வீடுகள் என்னுடையவை என்கின்றனர்; "என்ன வாடகை வருகின்றது" என்று கேட்டால் "இவைகளை விற்று 12 ஆண்டுகள் ஆகிவிட்டன" என்கின்றார். விற்றுவிட்ட வீட்டையும் நிலத்தையும்கூட என்னுடையவை என்பதில் ஒரு திருப்தியடைகின்றான் மனிதன். என்னே அறியாமை! பாவங்கள் பல செய்த ஒரு கிழவி நரகில் தீயிடை கிடந்து நெளியும் புழுவைப்போல் துடித்துக்கொண்டிருந்தாள். அவ்வழியே ஒரு தேவதூதன் சென்றான். அவனைக் கண்ட கிழவி, "ஐயா! புண்ணியமூர்த்தி! என்னால் இந்த நரக வேதனையைத் தாங்கமுடியவில்லை. உனக்குக் கோடி புண்ணியம் வரும். என்னை இதனின்றும் கைதூக்கிவிடு" என்று ஈனமான குரலில் அலறினாள்.

தேவ தூதனுக்கு இரக்கமுண்டாயிற்று. "கிழவியே! உன்னை நான் சுவர்க்கத்தில் சேர்க்க வேண்டுமாயின் புண்ணியம் சிறிதாவது செய்திருத்தல் வேண்டும். நீ ஏதாவது புண்ணியஞ் செய்துளாயோ?" என்று கேட்டார்.

அக் கிழவி "ஐயனே! எனக்கு ஏராளமான செல்வங்கள் இருந்தன. எல்லாம் என்னுடையவை என்னுடையவை என்று வைத்துக் காப்பாற்றினேன். அவைகளில் இங்கு ஒரு அணுகூட வரவில்லை. அறியாமல் கெட்டேன். கருணாநிதி! பொறுக்க முடியாத வேதனையால் தவிக்கும் என்னைக் காப்பாற்று" என்றாள்.

தேவதூதன்: கிழவியே! ஒன்றுமே தருமஞ் செய்ய வில்லையா?

கிழவி: கண் தெரியாதவர்கள் வந்து கேட்டால் காலணு போடுவேன்.

தேவதூதன்: நல்லது; காலணுவாவது தந்தனையே.

கிழவி: காலணு போட்டு நாலணு எடுத்துக்கொள் வேன்.

தேவதூதன்: அடி பாவி, கண்ணில்லாதவர்க்கு உபகரிக்க வேண்டாமா? எறும்புக்கு நொய்யரிசி போட்டனையா?

கிழவி: இல்லை, நெருப்புதான் போட்டேன். ஐயா! நான் செய்த பாவங்கட்கு அளவில்லை. இப்போது அறிகின்றேன். என்னை மன்னித்துக் கரையேற்று.

தேவதூதன்: அம்மா! ஒரு சிறிதும் புண்ணியம் செய் யாதார், புண்ணிய உலகை யடைய மாட்டார். கடுகு நுழைய இடமிருந் தால் கடப்பாரையை நுழைப்பேன். அணுவளவும் தருமம் புரியாத உன்னை நான் எப்படிக் காப்பாற்ற முடியும்?

கிழவி: ஐயா! இப்போது நினைவுக்கு வருகின்றது; ஒரு நாள் நான் வாழைப் பழம் சாப்பிடும் போது ஒரு பழத்தில் பாதி அழுகியிருந் தது. அந்த அழுகிய பாதியுடன் அழு காத பாதியையும் சேர்த்து ஒரு பிச்சைக் காரிக்குப் போட்டேன்.

தேவதூதன் 'நல்லது' என்று கூறினர். அங்கு அந்தப் பாதி வாழைப்பழம் வந்து நின்றது; அந்தப் பாதியிற் பாதியைத் தேவதூதன் பற்றி கிழவியை மற்றப் பாதியைப் பற்றுமாறு செய்து அதன் மூலம் அவளை நரகினின்று எடுத்தார். நரகிலே இருந்த மூன்று நான்கு பாவிகள் கிழவியின் காலைப் பற்றிக் கொண்டார்கள். கிழவி தொடக்கத்தில் அதனை யறிய வில்லை. தேவதூதன் மெல்ல அவளை மேலுலகிற்குக் கொண்டு போம்பொழுது, கிழவி தன் காலைப் பற்றிக் கொண்டு வருபவர்களைக் கண்டு சீற்ற முற்ருள். "ஏய்! என் வாழைப்பழத்தைப் பற்றிக்கொண்டு நான் சுவர்க்கம் போகின்றேன். நீங்கள் யார் என் காலைப் பற்றிக்கொண்டு வருகின்றீர்கள்?" என்று கூறினுள்.

தேவதூதன், "கிழவியே! தருமஞ் செய்த பழத்தை என்னுடையது என்று கூறுவது பொருந் துமா? உன் பழத்தை நீயே பிடித்துக்கொள்" என்று விட்டுவிட்டார். கிழ்வி பழையபடியே நரகில் வீழ்ந் தாள்.

ஆகவே எனது எனது என்ற எண்ணமுள் ளோர் அருளுலகம் அடையார்.

என்னது யான் என்பதற எவ்விடமும் என்ஞசான்
சந்நிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ.

என்னது யான் என்னலற்ருேர் எங்கிருந்து
பார்க்கினும்நின்
சந்நிதியாம் நீபெரிய சாமி பராபரமே. —தாயுமானுர்

8. நான்

அன்பர்களே!

இறப்புக்கும் பிறப்புக்கும் காரணம் பற்றும் அவாவுமாகும்; தன் பொருளில் வைப்பது பற்று: பிறர் பொருளில் வைப்பது அவா. முதலில் அவாவை விடவேண்டும். பின்னர் பற்றை விடவேண்டும். "பற்றவாவேரொடு பசையற பிறவி போய் முற்ற" என்பார் கம்பர், 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பார் நம்மாழ்வார்.

மனைப்பற்று, நிலப்பற்று, புகழ்ப்பற்று, பொன் பற்று, போருட்பற்று இப்படிப் பல நூறு பற்றுக்கள் நம்மைப் பற்றி நிற்கின்றன. இவைகளை விடுவது எளிதன்று. இவைகள் விலகுவதற்கு ஒரு சுலபமான வழியைச் சொல்லுகின்றார் வள்ளுவர். பற்றை விடுவதற்கு நீ முயலாதே. அது உன்னால் முடியாது. பற்றற்றானாகிய பரம்பொருளைப் பற்று. ஏனைய பற்றுக்கள் தானே விலகும். விளக்கை ஏற்று; இருள் தானே விலகும்.

> பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்றுவி டற்கு.

கவலைகள் கெடவேண்டுமானால் இறைவனைப் பற்றி நிற்கவேண்டும்.

"நிலையழி கவலைகள் கெடஉன தருள்விழி
நின்றுற் றிடவேதான்
நினதிரு வடிமல ரிணைமன தினிலுற
நின்பற் றடைவேனோ"

என்பது திருப்புகழ்.

இனி, பற்று இருவகையாகும்; அகப்பற்று, புறப்பற்று எனப்படும். நான் என்பது அகப்பற்று; எனது என்பது புறப்பற்று. இதனை அகங்காரம் மமகாரம் என்று கூறுவர் வடநூலார்.

நான் செய்கின்றேன்; நான் நடாத்துகின்றேன்; நான் இதற்குத் தலைவன்; நானின்றி இவைகள் நடைபெறமாட்டா; என்று எண்ணுகின்ற நான் தொலைய வேண்டும். நான் கெட்ட இடத்தில் பரவொளி தோன்றும்.

"ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென்
உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ?"
—திருவாசகம்.

"நான்போ யொடுங்க அடங்கலும்
மாய்ந்தால் விளங்கும்" —திருப்புகழ்

"வான்காணு மறைகாணு மலரோன் காணுன்
மால்காணுன் உருத்திரனும் மதித்துக் காணுன்
நான்காணு இடத்ததனைக் காண்பேம்"—திருவருட்பா

ஆகவே நான் எனும் அகப்பற்றை அறவே துறந்து உலகை மறந்து அருள் நெறியில் சிறந்து விளங்க வேண்டும்.

ஒரு திருமடத்தில் ஞானகுருநாதர் மாணவர்கட்கு நாடோறும் ஞான சாத்திரங்களை இனிது முறையே பாடஞ் சொல்லிவந்தார். பல மாணவர்கள் பயபக்தி விசுவாசத்துடன் அவரிடம் பாடங் கேட்டார்கள். அந்தணச் சிறுவர்கள், அரசகுமாரர்கள், வைசிய பாலர்கள், வேளாளமைந்தர்கள் இவ்வாறு பலவகைப்பட்டவர்கள் அங்குவந்து ஒழுங்காக அமர்ந்து அமைதியாகப் பாடங்கேட்டு உள்ளந் தெளிவுபெறுவர். ஆடு, மாடு மேய்க்கின்ற ஒரு யாதவர், படிக்கத் தெரியாதவர், கம்பளியும் கோலுமாக ஒருபுறம் ஒதுங்கியிருந்து குருநாதர் கூறுவதைக் கூர்மையாகக் கேட்டுத் தலையசைப்பர். சில சமயம் அவர் கண்களில் நீர் பெருகும். குருநாதரும் அவரை அடிக்கடி பார்த்து அன்புடன் பாடஞ் சொல்வார்.

இவ்வாறு நிகழ்கின்றபோது, உயர்குலச் சிறுவர்கள் அந்த யாதவரைக் கண்டு அலட்சியஞ்செய்தார்கள். அவரைக் கண்டு ஏளனமுஞ் செய்தார்கள். தாங்கள் நன்கு படித்தவர்கள் என்றும், அவர் படிக்கத் தெரியாத மூடர் என்றும் அவர்கள் கருதினார்கள்.

குருநாதர், மாணவர்களுடைய நான் எனும் அகந்தையை அகற்றத் திருவுளங்கொண்டார். ஒரு நாள் இரவு பாடம் முடிந்தது. எல்லோரும் தத்தம் இருக்கைக்குப் போவதற்குப் புறப்பட்டார்கள்.

குருநாதர், "மாணவர்களே! உங்களில் முதலில் மோக்ஷத்திற்கு யார் போவீர்கள்?" என்று கேட்டார்.

ஒரே மௌனம்; மாணவரில் ஒருவனும் விடை கூறவில்லை. திகைத்து நின்றார்கள். குருமூர்த்தி தனித் தனியே ஒவ்வொருவனையும் அழைத்துக் கேட்டனர். ஒருவன் 'நான் இன்னும் சிவஞானபோதம் பாடங் கேட்கவேணும்' என்றான். ஒருவன் 'எனக்கு ஐம்பது அறுபது வயதுக்கு மேல்தான் நான் அதைப் பற்றிக் கூறமுடியும்' என்றான். ஒருவன் 'திருமந்திரம் பாடங் கேட்கவேணும்' என்றான். இப்படி எல்லோரும் ஒவ் வொன்றைக் கூறினார்கள். குருநாதர் இறுதியில் யாத வரை நோக்கி, "அப்பா! நீ என்ன கூறுகின்றாய்?" என்றார். அவர் குருசுவாமியை வணங்கி, 'ஐயனே! மோட்சத்திற்கு நான் போனால் போவேன்' என்றார். அவர் கூறிய சொற்றொடருக்குப் பொருள் விளங்கப் பெறாத மாணவர்கள் அவர் மீது சீறினார்கள். "குரு நாதருக்கு முன், படித்த நாங்கள் மோட்சத்திற்கு போகமுடியும் என்று கூற அஞ்சுகின்றோம்; ஆடு, மாடு மேய்க்கின்றவனும் கல்வி யறிவில்லாதவனு மாகிய இவன் வாய் கூசாமல் 'நான் போனால் போவேன்' என்கின்றானே; இது அடுக்குமா?" என்று சினந்துரைத்தார்கள்.

ஆசாரியர், "மாணவர்களே! இரையாதீர்கள்; பொறுமையாக இருங்கள், அப்பா! நீ என்ன கூறு கின்றாய்?" என்று மீண்டும் அவரைப் பார்த்து வினவினார்.

அவர், "சுவாமி! வெறும் படிப்பும் குல நலமும் மோக்ஷத்தைத் தரமாட்டா. நான் போனால் போவேன்.

நான் என்ற அகப்பற்று போனால் முத்தியடைவேன்'' என்று விளக்கிக் கூறினார். அதனைக் கேட்ட மாணவர்கள் தலை கவிழ்ந்தார்கள். அவருடைய சொற்களில் உள்ள நுட்பத்தை யுணர்ந்து வியந்தார்கள். அன்று முதல் அவரை மதித்துத் துதித்தார்கள்.

ஆகவே ''நான்'', ''நான்'' என்னும் தன்மையை விலக்கி நன்மையடைய முயலுவோமாக.

''நானென்னும் ஓரகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானாவாகித்
தான்வந்து தொடரு மித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லார்''

—தாயுமானார்.

உ
முருகா

௯. காட்சி

அன்பர்களே!

காட்சி என்பது எது? அக் காட்சி எவ்வாறு அமையவேண்டும்? என்று சிந்திக்கவேண்டும். சிலர் பொருட்காட்சி, கண்காட்சி, விலங்குக் காட்சி முதலியவைகளைக் கண்டு களிக்கின்றார்கள். இவைகள் யாவும் நற்காட்சியாகா.

எல்லாவற்றையும் ஒன்றுபோல் காண்பதுவே சிறந்த காட்சியாகும். "ஒன்றாகக் காண்பதுவே காட்சி" என்று அருளிச் செய்கின்றார் ஔவையார்.

ஏழையையும் தனவந்தனையும் ஒன்றாகக் காண வேண்டும்; இன்பத்தையும்துன்பத்தையும், இகழையும் புகழையும், ஏற்றத்தையும் தாழ்வையும், போக்கையும் வரவையும், வந்தனையையும் நிந்தனையையும் ஒன்றாகக் காண்பதுவே காட்சி; பளிங்கு போல் தூய மனமுள்ளவர்க்கே இது அமையும்.

இன்ப துன்பத்திற்குக் காரணம் நாம் செய்த வினைகளேயாகும். ஒருவன் நம்மை நிந்திப்பானாயின், முற் பிறப்பில் நாம் ஒருவனை நிந்தித்திருப்போம்; அவ் வினை இப்போது ஆத்தியான்மிகமாக வருகின்றது. நம் வினையை நினைந்து அமைதி யடையவேண்டும். ஆவாரை யாரே அழிப்பார்? சாவாரை யாரே தவிர்ப்பார்? ஒருவராலும் ஆகாது. ஆவதும் சாவதும் நாம்

செய்த வினையாலேதான் என்று உள்ளூர உணர்ந்து உய்யவேண்டும்.

அப்படி நாம் அறிவோமாயின் சம நோக்கம் வரும். யார்மீதும் காய்தல் உவத்தல் உண்டாகாது. கண்ணபிரான் உயர்ந்த வெண்ணையையும் தாழ்ந்த மண்ணையும் உண்டார்.

ஜனகர் வெப்பத்தையும் தட்பத்தையும் ஒன்றாக நோக்கினார்.

தருமர் இகழையும் புகழையும் ஒன்றாகப் பார்த்தார்.

இராமர் காட்டையும் நாட்டையும் ஒன்றென மதித்தார்.

அப்பரடிகள் பொன்னையும் மண்ணையும் ஒன்றெனப் பார்த்து உழவாரப் படையால் பேர்த்து எறிந்தார். அவ்வாறு காண்கின்ற காட்சி அருட்காட்சி யெனப்படும். அக் காட்சியைக் காண்போர் மனம், அலையற்ற கடல்போல், காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கைப்போல், சலனமற்று இருக்கும். அவர்கள் உள்ளம் எப்போதும் குளிர்ந்திருக்கும். அவர்கள் முகம் மலர்ந்திருக்கும். கண்களில் கருணை வழியும். அத்தகைய ஆன்றோரைக் காண்பது ஒரு இனிய காட்சியாகத் திகழும். கண்ட கண் குளிரும்.

ஒரு கணவனும் மனைவியும் நல்லறமாகிய இல்லறத்தில் முறையே வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். பின்னர் இருவரும் துறவு பூண்டார்கள். கணவன்

மனைவி யென்ற எண்ணம் நீங்கியது. உண்மையான துறவுபூண்ட அவர்கள் இன்றிருந்த ஊர் நாளையிராமல் மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்த்தொடங்கி யாத்திரை செய்துவந்தார்கள்.

திருச்செந்தூர் கடற்கரைவழியே ஆண் துறவி முன்னும், பெண் துறவி சற்று பின்னுமாக நடந்து கொண் டிருந்தார்கள். ஒரு தனவந்தன் தன் மனைவியுடன் முன்னொருநாள் கடலில் நீராடியபோது. ஒரு வைர வளையல் கழன்றுவிட்டது. அவன் தேடிப் பார்த்து கிடைக்கப்பெறுமல் மனம் வருந்திச் சென்ருன். அவ் வளையல் இப்பொழுது வெளிப்பட்டு கதிரவன் வெய்யில் பட்டு விளக்கு போல் ஒளி செய்து கொண்டிருந்தது. ஆண் துறவி கண்டார். அவர் உண்மையாகத் துறந்தவர். அதில் அவருக்குப் பற்று வரவில்லை. "ஒரு வேளை பின்னே வருகின்ற அம்மாளுக்கு இதைக் கண்டவுடனே தனக்கு என்று விருப்பம் வாராதாலும் தன் தங்கை தமக்கை முதலியோர்க்கு எடுத்துத் தரலாம் என்ற எண்ணம் வரக் கூடுமோ? அவ்வாறு எண்ணினுல் துறவின் தூய்மை கெடுமே?" என்று கருதி வைர வளையலை மணலைப் போட்டு மூடினுர்.

அதற்குள் அங்கு பெண் துறவி வந்தார். "சுவாமீ! என்ன அது? ஏன் மணலை யிட்டு மறைக்கின்றீர்?" என்று வினவினுர்.

"ஒன்றுமில்லை"

"சுவாமீ! துறவிகள் விளையாட்டுக்கும் பொய் சொல்லக்கூடாது; உள்ளதை உரையும்"

"ம்...வைர வளையல்"

"இதை ஏன் மணலால் மறைத்தீர்?"

"ஒரு வேளை நீங்கள் பார்த்தால் உமது உடன் பிறந்தார்க்குத் தரலாம் என்ற எண்ணம் வந்தால் துற வுக்குப் பங்கம் வருமே என்று மறைத்தேன்"

"நீர் துறவிதானா? துறவுக்கும் உமக்கும் எத்தனைத் தூரம்? இனி நான் உம்முடன் சேர்ந்து யாத்திரை செய்யமாட்டேன்; நீர் உண்மைத் துறவியாகமாட்டீர். ஆ! ஆ! என்ன விந்தை. இது வைரம், இது மணல் என்ற வேற்றுமைக் காட்சி துறவிகட்கு வரலாமா? அவ்வாறு வந்தால் துறவு ஆகாதே. சிவனே! இதுவும் ஒரு மணல், இதுவும் ஒரு மணல்; மணலை மணலால் மூடுவானேன். ஆகவே மனதில் வைரம் உயர்ந்தது என்ற எண்ணம் வந்துவிட்டபடியால் துறவின் தூய்மை சற்று குன்றிவிட்டது" என்று கூறி அந்தப் பெண்துறவி அவரை விட்டுப் பிரிந்து வேகமாக நடந்து மறைந்துவிட்டார்.

ஆண்துறவி அப்படியே சிலைபோலே அசைவற்று நின்றுவிட்டார்.

ஆகவே ஒன்ருகக் காண்பதுவே காட்சி.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்"

--பெரியபுராணம்.

உ

முருகா

10. பேண்

பேணுந் தன்மை வாய்ந்தவள் பெண்; அழகுக்கு உறைவிடம் ஆதலால் மாது எனப்படும். பெண்மையில் கற்பென்னுந் திண்மையமைந்துளது. இந்தப் பாரத நாட்டிற்குப் பெரும் புகழை விளைவிப்பவர்கள் மூவர். கற்புடைய மாதர்கள்; பக்தர்கள்; தத்துவ ஞானிகள். இம் மூவரில் முதலில் நிற்பவர்கள் கற்புடைப் பெண்டிர். "பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்" என்று கூறுகின்றார் திருமூலர்.

இந்த நாட்டினில் கற்புடைமை அதிகம். பலப் பல பதிவிரதா சிரோன்மணிகள் வாழ்ந்தார்கள். என்ன தீமை நாட்டிற்கு வந்தாலும் கற்புக்கு இடர் வரக் கூடாது. பக்தர்களையும் முத்தர்களையும் சித்தர்களையும் பெறுகின்றவர் பத்தினிகள்தானே! கற்புடைய மாதர்கள் இருப்பாராயின் மீண்டும் நாட்டிற்குத் தேவையான பல ஆன்றோர்களை நமக்குத் தருவார்கள்.

பெண்ணிற்குத் தமிழகம் பெருமை கொடுத்த அளவில் வேறு நாடு தரவில்லை. பெண்களால் வாழ்ந்த நாடு இந்நாடு. நீதி நெறிகளை வாழவைத்தவர் ஔவையார்; சைவவுலகுக்கு உயிர் கொடுத்தவர்

மங்கையர்க்கரசியார்; வைணவ உலகுக்கு வாழ்வு தந்தவர் ஆண்டாளம்மையார். மேலும் திலகவதியார், திருவெண்காட்டு நங்கையார், மாதினியார், இசை ஞானியார் போன்ற பல பெண்மணிகள் இந்நாட்டை அலங்கரித்தார்கள்.

இனி பெண்ணில்லையானால் வாழ்வு இல்லை; வீட்டிற்கு உரியவளே பெண்தான். அதனால் "இல்லாள்" எனப்படுகின்றாள். இல்லான் என்று ஆடவனைக் கூறினால் ஒன்றுமில்லாதவன் என்று பொருள்படும். இல்லாள் என்றால் வீட்டை ஆளுகின்றவள் என்று பொருள். "இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்கின்றார் ஔவையார்.

மனைவி யென்று பெண்ணுக்குப் பேருண்டு; மனைவன் என்று ஆணுக்குப் பெயரில்லை. இந்த உலகமே பெண் மயமாக அமைந்துள்ளது. செல்வத்தைத் தனலட்சுமி யென்றும், தானியத்தைத் தான்ய லட்சுமி யென்றும், வீட்டைக் கிரகலட்சுமி யென்றும் கிராமத்தைக் கிராமதேவதை யென்றும், தேசத்தை இந்தியத்தாய் என்றும், பாரதமாதா என்றும், கல்வியைக் கலைவாணி யென்றும், வலிமையைப் பராசக்தி யென்றும், ஞானத்தை ஞானம்பாள் என்றும், தண்ணீரைக் கங்காதேவி யென்றும், மண்ணினைப் பூமி தேவி யென்றும், பேசும் மொழியைத் தாய்மொழி யென்றும், நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும், இவ்வாறு எல்லாவற்றையுமே பெண்ணின் பேரால் அமைத்து மகிழ்வதனால் பெண்ணின் பெருமை வலியுறுகின்றது.

அன்பும் இரக்கமும் பெண்ணிடத்திலே அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றன. அதனாலேயே இறைவன் பிள்ளைப்பேற்றைப் பெண்ணிடமாகவே அமைத்தான்.

அறப்பண்பும் பெண்ணிடம் அமைந்துளது. 'அறம் வளர்த்த நாயகி' 'தர்ம சம்வர்த்தனி' என்று அம்பிகையைக் கூறுவதனாலும், வருகின்ற ஏழைகள், "அம்மா பிச்சை", "பார்வதா பிச்சை" என்று அழைத்துக் கேட்பதனாலும் அறிக.

கணவனுக்கு ஆயுள், புகழ், பெருமை, செல்வம், நோயின்மை முதலிய யாவும் மனைவியினாலேயே வருகின்றன. "ஏரைப் பிடித்தவன் என் செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்ற பழமொழியாலும், "மதுரை சொக்கர் ஞானம் மிகப் பெற்று வாழ்வதெல்லாம் சொக்க நாயகியாள் பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே" என்ற பாடலாலும் அறிக.

காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் முதலிய சங்க காலத்துப் பெண்களும், நளாயனி, தமயந்தி, சந்திரமதி, அநுசூயை, வாசுகி முதலிய பெண்களும், பெண்ணுலகிற்கு அழியாத புகழைத் தேடி வைத்தார்கள்.

நாம் பெண்மையடைந்தாலன்றி முத்தி இன்பம் கிடையா தென்பதையும் சாத்திரத்தாலறிக.

அறிவு என்பதும் பெண்ணிடத்திலே மிகவும் கூர்மையாக அமைந்துளது. ஒரு சமயம் பொய்யா

மொழிப் புலவர் மதுரைக்கு வந்திருந்தார். நான்காவது சங்கம் நிறுவிச் செந்தமிழை வளர்க்கும்பொருட்டு வணங்காமுடிப் பாண்டியனைக் கண்டு தன் கருத்தை யறிவித்தார். பாண்டியன் அவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்து இருத்தினான்.

மன்னன் பின்னர் அரசகருமங்களிலை புலவர் வந்த கருமத்திலே கவனஞ் செலுத்தினானில்லை. புலவர் வெகுண்டார். "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னை யறிந்தோ தமிழை யோதினேன்" என்று கூறும் உறுதியுடைய புலவர் மரபில் வந்தவர் பொய்யாமொழியார். சீற்றமுற்றுப் பல்லக்கில் ஏறி மதுரையை விட்டுப் புறப்பட்டார். புலவர் வெகுண்டால் நாடு நலமுறாது. இதனை ஒரு தூதன் பாண்டிமாதேவியிடம் கூறினான். அந்தவேளையில் பாண்டியன் உறங்கிக்கொண்டிருந்தான்.

அரண்மனையிலிருந்து ஒரு இளம்வீரன் புறப்பட்டு விரைந்து சென்று புலவருடைய பல்லக்கைத் தாங்கிச் சுமந்தான். பல்லக்கு ஆடியது. புலவர் "காரணம் என்ன" என்று வினவினார். புதியவன் ஒருவன் சுமப்பதாக அறிந்தார். பல்லக்கை விட்டு இறங்கிப் பார்த்தார். "அம்மணி! பாண்டிமாதேவீ! என்ன விந்தை? தாங்கள் ஆண் உடை உடுத்து வந்து பல்லக்கு சுமப்பது முறையா?" என்று கேட்டார். உடனே அரசமாதேவி தொப்பி, நிஜார், அங்கி முதலியவை களைக் களைந்தெறிந்து, புலவரைத் தொழுது, "பெருமானே! என் கணவனார் அரச கருமத்தினால் தாங்கள்

வந்த கருமத்தில் கவனஞ் செலுத்தாதிருந்தனர்; அதை மன்னிக்க வேண்டும்'' என்றாள்.

பொய்யாமொழிப் புலவர் அந்த அம்மையாருடைய அறிவின் திறத்தை மெச்சிப் பாடுகின்றார்;

உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பே
உமையாளுக் கங்குண்டோ ரூனம்—உமையாள்தன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான்
பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டான் அரசு.

‘‘உமையாளை மணந்த சிவனார் பிட்சாடனராய்த் திரிந்தார்; உன்னை மணந்த பாண்டியன் அரசு புரிகின்றான்'' என்று புகழ்ந்து, மீண்டும் மதுரை வந்து சங்கத்தை நிறுவி பாண்டியனையும் பாண்டிநாட்டையும் வாழ்த்தினார்.

ஆனபடியால் விண்ணுலகமும் மண்ணுலகமும் பெண்ணுலகத்தினால் விளக்கம் பெறுகின்றன.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்

—தமிழ்மறை.

உ
முருகா

11. அவசரம்

நாம் என்ன செய்யவேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கின்ருேம்? செய்யவேண்டிய கருமங்களுள் முக்கியமும் முதன்மையும் ஆனது எது? முந்தி செய்யவேண்டியது எது? சற்று பிந்தி செய்யவேண்டியது எது? என்ற சிந்தனைகள் அறிவு படைத்தவன் உள்ளத்தில் தோன்ருமலிருக்க முடியாது.

ஒருவனுக்குத் தலை மயிர் தீப்பற்றிக்கொண்டது. உணவும்உறக்கமும் மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்ருலும் அவைகளை அவன் அப்போது விரும்பமாட்டானல்லவா? தலைமயிர் எரியுந் தருணத்தில் அவசரமாகத் தேடவேண்டியது தண்ணீர் ஒன்று தானே.

நாம் இந்த வகையில் மிகவும் கவனக் குறைவாக இருக்கின்ருேம். முந்தி செய்யவேண்டியதைப் பிந்தி செய்கின்ருேம். செய்யவேண்டியதைச் செய்யாமலும் இருக்கின்ருேம். செய்யவேண்டாததையும் செய்து கொண்டிருக்கின்ருேம்.

மரணபயம் தலைக்குமேலிருக்கின்றது. எந்தக் கணத்தினும் அது வரும். மேலே எறிந்த கல் கீழே விழாமற் போகாது. அதுபோல் உடம்பெடுத்த நாம் மரணமடைந்தே தீருவோம். சில சாதனைகள் செய்து பன்னெடுங்காலம் இருந்தோரும் முடிவில் மடிவர். தேவரும், மூவரும், சித்தரும், முத்தரும் மடிவர் என்ருல் அற்பர்களாகிய நாம் மடிவதில் என்னஐயப்பாடு? அதை மறந்து மெத்தனமாக இருக்கின்ருேம்.

மரணபயம் விரைந்து நம்மை வெருட்டுகின்ற இத்தருணத்தில் நாம் அவசரமாகச் செய்யவேண்டியது எது?

நெடுங்காலம் இருக்கவேண்டும் என்று விரும்புவது சரியன்று. இந்த உடம்பு மிகவும் கனமானது, மலஞ் சோரும் ஒன்பது ஓட்டைகளுக்கும், பல நோய்களுக்கும் இருப்பிடம் ஆனது; நாம் இதைச் சுமக்கவில்லையானால் நான்கு பேர் சேர்ந்து சுமக்கவேண்டும். ஆகவே இந்த உடம்புடன் இருக்க ஆசைப்படக் கூடாது. "வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்" என்கின்றார் மணிவாசகனார். இந்த உடம்புடன் கூடியிருக்கின்ற நாம் அவசரமாகச் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும்.

நமக்கு மூன்று உறுப்புக்கள் இருக்கின்றன. அவையாவன;

1. சாங்கம்;-(பிரிக்கமுடியாதஉறுப்பு) கரசரணங்கள்.
2. உபாங்கம்:-(பிரிக்கத் தக்க உறுப்பு) ஆடை அணிகலன்கள்.
3. பிரத்தியங்கம்:- (பிரிந்தே இருக்கும் உறுப்பு) நாம் வைத்திருக்கும் பாத்திரம் பண்டங்கள்.

நமக்கு ஒரு பெரிய ஆபத்து வருங்கால் நாம் எதனை அவசரமாகக் காப்பாற்றவேண்டும் என்பதைச் சிந்தியுங்கள்; ஒரு யானை விரட்டுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். சாங்கமாகிய கை கால்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? உபாங்க

மாகிய ஆடை அணிகலன்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? பிரத்தியங்கமாகிய பாத்திரம் பண்டங்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? பாத்திரம் பண்டத்தினும், ஆடை அணியினும், கர சரணங்கள் முக்கியமல்லவா? அவைகளை யல்லவா அவசரமாகக் காப்பாற்றவேண்டும். கை கால் ஒடிந்தாலும் கவலையில்லை; பாத்திரம் பண்டங்கள் பழுது படக்கூடாது என்று எண்ணுபவன் அறிவை நாம் என்ன என்று எண்ணுவது?

இனி நாம் என்பது இந்த உடம்புஅன்று. உடம்பு நாம் குடியிருக்கும் வீடு; நாம் என்பது ஆன்மா.

ஆன்மாவுக்குச் சாங்கம் எது? உபாங்கம் எது? பிரத்யங்கம் எது? என்று சிந்திக்கவேண்டும். ஆன்மாவுக்குச் சாங்கம் அறிவு.

உடம்புக்குக் கரசரணங்கள் அன்னியமாகாதவை போல், ஆன்மாவுக்கு அறிவு அன்னியமன்று; ஆன்மாவுடன் அறிவு பிரிவற நிற்பது. அரிசிக்கு வெண்மை நிறம் இயல்பு. ஆனால் தவிடு மூடியிருக்கின்றது. தவிடு போக அரிசியைக் குத்தினால் அரிசிக்கு இயல்பாகிய வெண்மை நிறம் தானே வெளிப்படுகின்றது.

அதுபோல் ஆன்மாவுக்கு அறிவு இயல்பானது. அந்த அறிவை ஆணவமாகிய தவிடு மூடியிருக்கின்றது. ஆணவ அழுக்கு நீங்கினால் ஆன்மாவுக்கு இயல்பாகவுள்ள அறிவு விளங்கித் தோன்றும்.

ஆன்மாவுக்கு உபாங்கம்—உடம்பு
,, பிரத்யங்கம்—மனைவி, மக்கள், வீடு, நிலம், பொன் முதலியன.

இப்பொழுது சிந்தியுங்கள். ஆன்மாவுக்குச் சாங்கமாகிய அறிவு விளக்கமுற வேண்டுமென்று நாம் முயல்கின்றோமா? இல்லை.

உபாங்கமாகிய உடம்புக்காகச் சிறிது பாடுபடுகின்றோம். இனி பிரத்யங்கமாகிய மனைவி மக்களுக்காகவும், வீடு நிலங்களுக்காகவும், பொன் பொருள்களுக்காகவுந்தான் முழுநேரமும் செலவழிக்கின்றோம். நிலம் பொன் இவைகட்கு இடர் வருமாயின் அவைகளை வலுப்படுத்தும் வழக்கறிஞர்களுக்கு ஆயிரக் கணக்கான பொருள் வழங்குகின்றோம்.

உபாங்கமான உடல் நலங் குன்றுவதையுங்கூடப் பொருள் படுத்தாமல் பொன் தேடுகின்றோம்.

உபாங்கமான உடம்பை ஒரோ ஒரு சமயத்திலே கவனிக்கின்றோம். அதற்கு நோய் வந்தால் மருத்துவருக்கு நூறு இருநூறு தந்து உடலைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றோம்.

சாங்கமாகிய அறிவின் வளர்ச்சியைப் பற்றிய சிந்தனை சிறிதேனுமில்லை. அதனை வளர்க்குங் குருநாதரைத் தேடுவதுமில்லை. வறிதே வாழ்நாள் கழிந்தால் பின்னர் மரணமென்ற வெள்ளம் வந்துவிடுமே. அவ் வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டாமா? ஆகவே அவசரமாக நாம் ஒவ்வொருவரும் அறிவின் வளர்ச்சிக்காக அறிவு நூல்களைக் கற்றும், அறிவின் சிகரமாகிய ஆன்றோரையடுத்தும், அறிவின் வடிவாகிய ஆண்டவனை வேண்டியும் உய்வு பெறுவோமாக.

———

உ
முருகா

12. மேய்

கடவுள் ஒருவரே மெய்ப்பொருள். உலகத்தில் காணப்படும் பொருள்கள் யாவும் பொய்ப்பொருள் களேயாகும். இங்கே பொய் என்பதற்கு "நிலைபேறு இன்றி தோன்றி மறைவது" என்பது பொருள். உள்ளனபோல் தோன்றி சிலகாலம் இருந்து பின்னர் இருந்தஇடம் தெரியாமல் மறைந்துவிடுகின்ற பொருள் களை நாம் விரும்பியலைகின்றோம். மெய்ப்பொருளாகிய இறைவனை நாடுகின்றோமில்லை. ஏதோ ஒரு சமயம் நாடினும் அந் நாட்டத்தில் வேகமில்லை; அருள் தாக மில்லை. நாள்தோறும் மாண்டு மாண்டு மயானம் போகின்றவர்களைக் கண்டும் மதிமயங்கித் திரிகின் றோம். "அறஞ் செய்யாது அடியோடு இறந்து போனவர் வாழ்வு கண்டும் ஆசையிலே யழுந்தும் மயல் தீர" என்கின்றார் அருணகிரிநாதர்.

பொய்ப்பொருளாகிய பொன்மீதும் மண்மீதும் பெண்மீதும் வைத்துள்ள ஆர்வத்தில் இலட்சத்தில் ஒரு கூறுவது இறைவன் மீது வைக்கின்றோமில்லை. இங்ஙனமிருப்பின் எங்ஙனே கதி காண்பது?

எத்தனை செல்வம் பெற்றாலும் காணாது என்று மேலும் மேலும் பொருளை யீட்டி மயங்கித் தியங்கி மாள்கின்றார் பலர். மனித வாழ்க்கைக்குச் செல்வ

மும் வீடும் மாடும் தேவையானாலும் அளவுக்கு மேற்பட்டு தேடுவதால் யாது பயன்? குளிப்பதற்குத் தண்ணீர் தேவைதான். ஒரு நதியில் சென்று நீராடுகின்றோம்; இடுப்பளவு, மார்பளவு தண்ணீர் இருந்தால் போதுமே. அல்லது கழுத்தளவு தண்ணீர் இருக்கட்டும். தலைக்குமேல் போகின்ற வெள்ளம் சாணளவும் தூணளவும் ஒன்றுதானே. அதுபோல் ஒரு அளவுக்குச் செல்வம் தேடுவது நியாயம். பல லட்சம் தேடுவதால் பயன் யாது? பல லட்சமுடையவன் பத்து படி அன்னத்தையும் இருபது படி பாலையுமா அருந்துகின்றான்? "இப் பெரும் பணத்தை எவ்வாறு காப்பாற்றுவது?" என்று இடையறாது வருந்துவதைத் தவிர அவன் கண்ட பயன் வேறில்லை.

உலகமெல்லாம் ஆண்ட சகரன் எங்கே? திலீபன் எங்கே? அசோகன் எங்கே? பரந்த அரண்மனை புதுக்கிப் பல மனைவியரை மணந்த சரபோஜி எங்கே? அவர்கள் வாழ்வு எங்கே? எல்லாம் பழங்கனவாய் மறைந்துவிட்டன.

மெய்ப்பொருளை நாடிய வள்ளுவரும், நால்வரும், பன்னிருவரும், அருணகிரிநாதரும், தாயுமானாரும் இன்று அமரத்வம் பெற்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் உலவி வருகின்றனர். உலகுக்கு இன்றும் நின்று அவர்களுடைய ஞானவாக்குகள் வழி காட்டுகின்றன.

இனி இந்த உடம்பை மெய் மெய் என்று கூறுகின்றோம். நூல்களும் கூறுகின்றன. இது மெய்யா? பொய்யுடல்; மெய்யன்று. நன்கு சிந்தியுங்கள்.

''பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும்
பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ''

என்கின்றார் தாயுமானர்.

தாலியிழத்தலை தாலி பெருகிற்று என்று கூறுவது போல் மங்கல வழக்காக இப்பொய்யான உடலை மெய் யென்று உபசரித்தனர் என்பர் சிலர்; அற்றன்று.

எரிகின்ற சுடருக்கே விளக்கென்று பெயர். சந்தனமா சாணமா என்று பொருளை விளக்குவதனால் அது விளக்கெனப்பட்டது. திரிக்கும் எண்ணெய்க் கும் இவைகளைத் தாங்கியுள்ள தகளிக்கும் விளக் கென்று பேரில்லை. ஆனால் எரிகின்ற சுடரும், திரியும் எண்ணெயும் இல்லாத தகளித் தண்டை விளக்கு (குத்துவிளக்கு) என்கின்றனர். என்னபொருளில் அவ்வாறு கூறுகின்றனர்? எரிகின்ற விளக்காகிய சுடர் தங்கியிருப்பதனால் அத் தகளித்தண்டு தானியாகு பெயராக விளக்கெனப்பட்டது. அது போல் மெய்ப் பொருளாகிய இறைவன் இவ் வுடம்பில் தங்கியிருக் கின்றான். ஆதலின் இது மெய்யெனப்பட்டது. கடவுளுடைய பேராகிய மெய்யென்ற பேர் இவ் வுடம்பு பெற்றது என உணர்க.

''உடலிடங் கொண்டாய்'' என்பது மணிவாசகம். ஆகவே நீர்க்குமிழிக்கு நிகரான யாக்கை யழியுமுன் உடலிடங்கொண்ட மெய்ப்பொருளை யறிந்து அடை தற்குத் தீவிரமாக முயலுதல் வேண்டும். அதுவே அறிவும் ஆக்கையும் படைத்தார் கடன்.

இனி அம் மெய்ப்பொருளை யன்றி வேறுள்ள பொய்ப்பொருள்களை விரும்புதல் கூடாது.

நாரதர் ஒரு சமயம் பன்னெடுங்காலம் தவம் புரிந்தார். கருணைக்கடலாகிய கடவுள் அவருக்குக் காட்சியளித்தார். "நாரத! யாது வரம் வேண்டும்? கேள்" என்றார்.

நாரதர், "ஆண்டவனே! மெய்ப்பொருளாகிய நின்னையே விரும்பும் ஒப்பற்ற அன்பை யருளுவீர்" என்றார்.

கடவுள், "நாரத! அந்த வரத்தை அருளினேம்; உன் மீதுள்ள கருணையால் இன்னொரு வரமுந் தர விரும்புகின்றேன். இரண்டாவது வரங் கேள்" என்றார்.

நாரதர், "தெய்வமே! மெய்ப்பொருளாகிய உன்னை விரும்புவதை யன்றி இன்னொன்றை விரும்பாத தன்மையை அருள்புரிவீர்" என்றார்.

"சால நின்கழல் அன்பையே வேண்டுவன் தமியேன்" என்கின்றார் வீரவாகுதேவர்.

ஆகவே பொய்ப்பொருளை மறந்து, மெய்ப்பொருளை நினைந்து மெய்ம்மை பெறுவோமாக.

உ

முருகா

13. சொந்தம்

நமக்குச் சொந்தமல்லாத பொருளை நாம் நமக்குச் சொந்தம் என்று எண்ணியும், இவை நமக்குச் சொந்தம் என்று கூறியும் மதிமயங்கி நிற்கின்றோம்.

இந்த வீடு நம்முடையது என்கின்றோம். இதற்கு முன் எத்தனையோ பேர் அதனை என்னுடையது என்னுடையது என்று கூறினார்கள். நமக்குப் பின்னர் பலர் அவ்வாறு கூற இருக்கின்றார்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு உடையவர் என்று பேருண்டு. எல்லாம் அவருடைய உடைமை. "உடையானே" என்கின்றார் மணிவாசகர்.

நாம் விலை கொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால் பூச்சி முதலியவை, அந்த வீட்டை தமக்குச் சொந்தமாகவே எண்ணுகின்றன. அது போல் எல்லாம் இறைவனுடைமையாக இருக்கவும் அவற்றை நம்முடையவை என்று மயங்குகின்றோம். என்னே நமது அறியாமை?

இதனைவிட அறியாமை யுடையார் சிலர் உளர். "இந்த வீடு என்னுடையது" என்றார் ஒருவர்;

"என்ன வாடகை வருகின்றது" என்று கேட்டேன். "விற்று எட்டு ஆண்டுகள் ஆயின" என்றார். விற்று விட்ட நிலத்தையும் வீட்டையுங் கூட என்னுடையவையென்று பிறரிடம் காட்டிப் பெருமை பேசும் பித்தர் சிலர் உள்ளார்.

இனி இந்த உடம்பும் நமக்குச் சொந்தமன்று. இந்த உடம்பு நமக்கு இறைவன் கொடுத்த ஒரு வாடகை வண்டி. இதில் ஏறி நாம் பிரயாணம் பண்ணுகின்றோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை நமக்கு அளவிட்டுக் கொடுத்துள்ளார். அக் கால எல்லைக்குள் நாம் முத்தியுலகை நாடிப் பிரயாணம் புரியவேண்டும். பெரும்பாலோர் நமன் உலகை நாடியே போய்க்கொண்டிருக்கின்றார்கள். சாமாறே விரைகின்றனர்.

இந்த உடம்பை நெருப்பு எனக்கென்றும், புழு எனக்கென்றும், மண் எனக்கென்றும், பருந்து எனக்கென்றும், நரி எனக்கென்றும், நாய் எனக்கென்றும் கூறுகின்றன. நாம் நம்முடையது என்று கருதி ஜபம், தவம், தியானம், ஆலய வழிபாடு முதலிய ஒன்றும் புரியாமல், வேளை தவறாமல் விலாப்புடைக்க உண்டு இந்த உடம்பை வளர்க்கின்றோம்.

எரியெனக் கென்னும் புழுவோ யெனக்கெனும் இந்த மண்ணும்
சரியெனக்கென்னும் பருந்தோ எனக்கெனும் தான்புசிக்க
நரியெனக் கென்னும் புன்னாய் எனக்கெனுமிந் நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன்இத னால்என்ன பேறெனக்கே.

ஆகவே இந்த உடம்பு, செல்வம், வான், காற்று, கனல், புனல், மண், கதிர், மதி முதலிய எல்லாம் இறைவனுடைய உடைமைகள். ஸ்வம்—சொத்து; எல்லாவற்றையும் சொத்தாக உடையவராதலின் ஸ்வாமி என்ற பெயரால் ஆண்டவரை அழைக்கின்றோம்.

முற்றத் துறந்த முனிவர் ஒருவர் திருத்தல யாத்திரை புரிந்துவந்தார். பற்றற்ற பரமஞானியாகிய அவர் இன்றிருந்த ஊர் நாளை இரார். ஒரு வேளையே உப்பில்லாத உணவை உண்பார். அவர் பொய்யை அதிகமாக வெறுப்பவர்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரில் தலை'

என்ற திருக்குறளை இடையருது கூறுவார். அவருடைய வாய் மறந்தும் பொய் புகலாது; அன்றியும் பொய்புகல்வார் மனையில் புசியார். இதனை மிகவும் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினர்.

ஒரு ஊருக்குப் போனல் அங்கே உண்மை பேசுவோர் யார் எனக் கேட்டறிந்த பின்னர் அவர் வீட்டில் உச்சிப்பொழுதில் ஒரு சிறிது அன்னம் உண்பார்.

ஒருநாள் ஒரு ஊருக்குச் சென்றார். 'இந்த ஊரில் உண்மையாளர் யாவர்?' என உசாவினர். 'அதோ தெரிகின்ற மாடிவீட்டில் வாழ்கின்ற முதலியார் உண்மையாளர்; அடியார் பக்தியுடையவர். ஒரு லட்சம் செல்வமும், நான்கு புதல்வரும் உடையவர்' என்று

பலரும் பகர்ந்தார்கள். பின்னர் முதலியாருடைய வீட்டை முனிவர் அணுகினார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த முதலியார் பளீர் என்று எழுந்தார். ஓடிவந்து ஞானியார் அடிமலர் மீது விழுந் தார். அவரை ஆசனத்தில் எழுந்தருளப் புரிந்து, "பெருமானே! உணவு செய்ய எழுந்தருளவேண்டும்" என்று வேண்டினார். அவருடைய அன்பு அடக்கம் பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முக மலர்ந்து, உண்மையாளர்தானா என்று சோதித்தறிந்த பின்னரே உணவு செய்யவேண்டும் என்று உன்னினார்.

'ஐயா! உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?'

'சுவாமீ! இருபத்து இரண்டாயிரம் ரூபாயுண்டு'

'குழந்தைகள் எத்தனைபேர்?'

'சுவாமீ! ஒரே புதல்வன்தான்'

'உமக்கு என்ன வயது?'

'சுவாமீ! எனக்கு வயது மூன்று வருஷம் ஐந்து மாதம் ஏழுநாள் பதினாறரை மணி'

முனிவருக்குப் பெருஞ் சினம் மூண்டது. "மூடனே! நீ சுத்தப் புளுகனாக இருக்கின்றாய். பேசுவ தெல்லாம் பெரும் புரட்டு. உன் வீட்டு அன்னம் என் தவத்தை யழிக்கும். நான் பொய்யர்வீட்டில் புசியேன்" என்று கூறி, சீறி எழுந்தார்.

முதலியார் அவர் காலில்வீழ்ந்து, "அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் புகலேன்;

சத்தியம் சொல்கின்றேன்; சற்று நிதானமாக ஆய்ந்து பார்த்து உண்மை யுணர்வீராக" என்று கூறி தனது வரவு செலவு புத்தகத்தைக் காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு லட்ச ரூபாய் என்றிருந்தது.

"அடேய்! இதோ உனக்குச் சொத்து ஒரு லட்சமென்றிருக்கின்றதே. நீ இருபத்து இரண்டாயிரந்தான் என்று பொய் சொன்னாயே!" என்று கடிந்தார் முனிவர்.

"சுவாமீ! ஒருலட்ச ரூபாய் பெட்டியில் உளது. ஆனால் பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக்கணக்கில் இது காறும் இருபத்திரண்டாயிரமே செலவழிந்துளது. தருமம் புரிந்த பணந்தானே என்னுடையது; இப்போது நான் மாண்டால் இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வராதே. உடன் வருவது தருமம் ஒன்றுதானே. ஆகவே எனக்குச் சொந்தம் தருமம் புரிந்த இருபத்திரண்டு ஆயிரந்தான்" என்று கூறினார் முதலியார்.

முனிவர் இதைக் கேட்டு வியப்புற்றார். 'ஆமாம் உனக்கு நான்கு புதல்வர்கள் உண்டு என்று கேள்விப் பட்டேனே?'

'சுவாமீ! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனால் என் பிள்ளை ஒருவன்தான்'.

'அப்பா! நீ சொல்வதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே'

'சுவாமீ! விளங்க வைக்கின்றேன்.

(1) "ம க னே! நடராஜா" என்றழைத்தார் முதலியார்.

'சீட்டு விளையாடுகின்றேன். வரமுடியாது' என்ற பதில் வந்தது.

(2) 'மகனே! வேல்சாமீ!'

'ஏன் இப்படிக் கதறுகின்றாய்? வாயை மூடிக் கொண்டிரு'

(3) 'மகனே! சிவசாமீ!'

'உனக்குப் புத்தியிருக்கின்றதா? உன்னோடு பேச என்னாலாகாது. பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் இருக்கின்றாய்'

(4) 'மகனே! கந்தசாமி!'

கந்தசாமி ஓடிவந்து பிதாவையும் முனிவரையும் தொழுது, "சுவாமீ! பால் கொண்டுவரட்டுமா? பழம் கொண்டுவரட்டுமா?' என்று கேட்டு உபசரித்து விசிறி எடுத்து வீசிக்கொண்டு பணிவுடன் நின்றான்.

முதலியார், "சுவாமீ! அந்த மூவர்களும் என் புதல்வர்களா? என் கருத்துக்கு முரணானவர்கள் பிள்ளைகளா? போன பிறப்பிற் பட்ட கடன்காரர் கள். இவன் ஒருவன்தான் என் பிள்ளை" என்றார்.

"அப்பா! உன் கருத்து உவகையைத் தருகின் றது. வயது விஷயத்தில் நீ கூறியதன் உட்பொருள் யாது?"

"சுவாமி! அடியேன் நாள் 1-க்கு 1½ மணி நேரந் தான் வழிபாடு செய்கின்றேன். மிகுதி நேரமெல் லாம் வயிற்றுக்காகவும் குடும்பத்துக்காகவும் உழைக் கின்றேன். பேசாத நாள் எல்லாம் பிறவா நாள்தானே. இறைவனை மறந்த நேரம் இறந்த நேரம். இறைவனை நினைந்து பூசிக்கும் நேரந்தான் எனக்குச் சொந்தம். அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து பூசிக்கின் றேன். நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம் பூசை செய் கின்றேன். அந்த வகையாகப் பார்த்தால், முப்ப தாயிரத்து நூற்றுப் பன்னிரண்டரை மணி நேரம் ஆகின்றது. ஆகவே அடியேன் பிறந்து அறுபது ஆண்டுகளானாலும் எனக்குச் சொந்தவயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்து மாதம் ஏழு நாள் பதினறரை மணிதான்.

(1) தருமம் செய்த பணம் எனக்குச் சொந்தம்.

(2) என் கருத்தை அநுசரிக்கின்றவனே எனக் குச் சொந்த மகன்.

(3) பூசை செய்த நேரம் எனக்குச் சொந்தம்" என்றார்.

இதனைக் கேட்ட முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். அவர் வீட்டில் உண்டு வாழ்த்திவிட்டுச் சென்றார்.

உ

முருகா

14. மேன்மக்கள்

"மாவு மாக்களும் ஐயறிவினவே
மக்கள்தாமே ஆறறிவுயிரே"

என்கின்றூர் தொல்காப்பியர். ஆறறிவு படைத்த மக்களில் மூன்று பிரிவு உண்டு. (1) கீழ்மக்கள், (2) மக்கள், (3) மேன்மக்கள் என்பவை.

(1) கீழ்மக்கள்:-மக்களாகப் பிறந்தும் மாக்களைப் போல் (விலங்குகளைப்போல்) உண்பதும் உறங்குவதும் பொருந்துவதுமாகவே காலங் கழிப்பார் கீழ் மக்கள். பசி தாகங்களை அவிப்பதிலேயே நாட்டமுடையவர்.

(2) மக்கள்:—மக்கள் பண்பாட்டைப் பெற்று ஈவு இரக்கம்! சாந்தம் சீலம் முதலிய நற்குணங்களை யுடையவராய் வாழ்பவர்.

(3) மேன்மக்கள்:—மக்கள் பண்பாட்டைப் பெற்றதோடு அமையாது தெய்வத்தன்மை பெற்று, அருளாளராய், பிறருக்கென்றே வாழ்பவராய், ஒவ்வொரு மூச்சும் உலகம் உய்யும்பொருட்டே விடுபவராய் வாழ்பவர்.

நம்மில் பலர் மக்களென்ற பேரும் வடிவுங் கொண்டு மாக்கள் போலவே அருந்துதல் பொருந்துதலுடன் அமைந்து, துன்பத்தை இன்பமாக மயங்கி எண்ணி ஆமைபோல் தெளிவின்றித் திரிகின்றனர்.

ஆமையைக் கொன்று தின்போர் அதன் முதுகில் கெட்டியான ஓடு இருப்பதால், அதனை எளிதில் கொல்ல அடியிற்கண்டவாறு முயலுவர்.

மூன்று கற்களின்மீது பெரிய இருப்புக் கொப்பரையை வைத்து, நிரம்பத் தண்ணீர் விட்டு, தீயை மூட்டி, அதில் ஆமையை விடுத்து, மேலே ஒரு தட்டை மூடிவிடுவர். ஆமைக்கும் தண்ணீருக்கும் உறவு; அதனால் நீரிலுள்ள ஆமை தனக்குச் சுவர்க்க லோகம் கிடைத்திருப்பதாக எண்ணி இப்படியும் அப்படியுமாக நீரில் நீந்தி விளையாடும். தண்ணீர் சூடு ஏறி கொதிப்புற்றவுடன் அடிப்பகுதியில் சதையுள்ள ஆமை மாண்டு ஒழியும்.

அதுபோல, வாத பித்த சிலேத்துமமாகிய மூன்று கற்களின் மீது உடம்பாகிய இருப்புக் கொப்பரையைக் கூற்றுவனாகிய கொலைஞன் வைத்து ஆசையாகிய தண்ணீரை விட்டு, ஆன்மாவாகிய ஆமையை அதில் விடுத்து, பிராரப்த கன்மமாகிய தீயை மூட்டி, பந்த பாசமாகிய தட்டினால் மூடி வைத்திருக்கிறான். துன்பத்தை இன்பமாக எண்ணி ஆமை நீரில் நீந்தி விளையாடுவதுபோல் ஆன்மாவாகியநாம் தடுமாறுகின்றோம்.

வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின்றாடுகின்றேன் என்செய்வான் தோன்றினேனே.
— அப்பர்.

இவர்களைப்பற்றி வள்ளுவரும் அதிசயித்து உரைக்கின்றனர்.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

இனி மக்கட் பண்பு கொண்டு இப்பெரு நிலத்தில் வாழ்வோர் சிலர் உளர். மனித வாழ்க்கைக்குப் பண்பாடு உயிர்போன்றது. இதனை ஒவ்வொருவரும் இனிது ஓம்பி உய்வு பெறவேண்டும்.

இம் மக்கட் பண்பாடு உயர்ந்து உயர்ந்து நிறைவு எய்தியபின் தெய்வத்தன்மை வந்து சேரும். அத் தன்மை எய்தினோர் மேன்மக்களாவார்கள். அம் மேன்மக்கள் உயிருடன் உலகில் வாழும்பொழுது தமது உரை வளத்தாலும், உள வளத்தாலும், உணர்வு வளத்தாலும், உலகை உய்யக்கொள்வர். இவர்கள் பூத உடம்பு நீங்கியபின்னும் தமது அளவற்ற ஆத்ம சக்தியால் உலகுக்கு நன்மைபுரிவர். ஆதலால் இவர்கள் உடம்பு நீங்கி மாண்டவரே யாயினும் ஆண்டவனரு ளால் அமரத்வம் பெற்று என்றும் இருப்பவரே யாவார்கள்.

காட்டிலேவளர்ந்த சாதாரண மரங்களை வெட்டிக் குவித்தால் அவற்றை விறகு என்பர். அவற்றை விற்கும் கடைக்கு விறகுக் கடை என்றுபேர். தேக்கு முதலிய ஜாதி மரங்களை வெட்டிக் குவித்தாலும் அவற்றை மரமென்றே கூறுவர். அவற்றை விற்கும் கடைக்கு மரக்கடை என்று பேர். ஆகவே தேக்கு முதலிய மரங்கள் வெட்டுப்பட்டும் விறகென்று பேர் பெறுமல் மரமென்றே பேர் பெறுவது போல், மேன் மக்கள் இறந்தும் என்றும் இருப்பவர்களாகவே அம ரத்வம் பெறுகிறுர்கள். இந்த வரிசையில் நிற்பவர்கள் திருவள்ளுவர், சேக்கிழார் அடிகள் முதலிய மேன் மக்களாவார்கள். மேலும் மேன்மக்கள் ஓரொருகால்

தம் நிலையினின்றும் குன்றினும் தம்முடைய அருட் பண்பினின்றும் குன்றமாட்டார்கள். இவர்கட்கு மானமே லட்சியமாகத் திகழும். இதனைக் கீழேவரும் இனிய வரலாற்றால் அறிக.

சேரநாட்டைச் செந்நெறி நின்று செங்கோல் செலுத்திக் கணைக்காலிரும்பொறை என்ற மன்னன் அரசு புரிந்தனன். அவனுடைய உயிர்த் தோழர் பொய்கையார் என்பவர். இவர் பெரும் புலவர். இப் புலவருடைய தோழமையால் கணைக்காலிரும் பொறையின் புகழ்க் கதிர் பூவுலகமெங்கும் வீசியது. வாள் வலியாலும் தோள்வலியாலும் மிக்க சோழ மன்னன் செங்கணானென்பவன் பொய்கையார் தொடர்பினால் தானும் புகழ் பெற விழைந்தான். பொய்கையாரைத் தம்மிடம் வந்திருக்குமாறு தூதரை விடுத்து அழைத்தான். பொய்கையார், சோழநாடு வளமை மிக்கதென்றும் சோழன் செல்வச்சிறப்புடையவனென்றும் அறிந்தும் சேரனிடமுள்ள நட்பின் தகைமையால் அவனைவிட்டுப் பிரிய மாட்டாதவராய் சோழனிடம் செல்ல மறுத்துவிட்டனர்.

சோழன் பொய்கையாரைத் தன்பால் அனுப்பி வைக்குமாறும், இல்லையேல் செருக்களத்திற்கு வருமாறும், தூதரை அனுப்பினன். கணைக்காலிரும் பொறை புலவருடைய உரிமையில் குறுக்கே நில்லாமல் சேனைகளுடன் போருக்குப் புறப்பட்டு வந்தான். சோழனுக்கும் சேரனுக்கும் கடும்போர் நடந்தது. இறுதியில் உறுதியுடைய சோழன் வென்று சேரனைச்

சிறைப்படுத்தினன். சேரன் சிறையில் கிடந்து அல்லலுற்றனன்.

பொய்கையார் இதனை யறிந்து நண்பனுடைய சிறை மீட்கவேண்டி சோழன்பால் வந்து களவழி நாற்பது என்ற நூலைப் பாடினார்; அதனைக் கேட்ட சோழன் பெரிதும் மகிழ்ந்து, அவரை வணங்கி பெரும் பரிசில் தர முயன்றனன். பொய்கையார் பரிசிலை மறுத்துத் தமது நண்பன் கணைக்காலிரும்பொறையைச் சிறையிலிருந்து விடுவதையே பரிசிலாக வேண்டினார். அதற்கிசைந்த செங்கணான் பொய்கையாருடன் சேரர்கோனைச் சிறை மீட்கும்பொருட்டுச் சிறைச்சாலையில் நுழைந்தான்.

சிறையில் சேரர்கோன் தண்ணீர் விடாயால் வருந்திச் சிறைக் காவலனை நீர் தருமாறு கேட்டனர். அவன் சற்று அலட்சியமாகவும் தாமதமாகவும் நீர் கொணர்ந்து அவரை மதியாமல் ஒரு கரத்தால் நீரை நீட்டினன். சேரமன்னன் அந்நீரை வாங்கி உண்டு உயிர் வாழ விரும்பாதவராய் "இறைவா!" என்று அழைத்தார். அவர் உடம்பினின்றும் உயிர் பிரிந்து விட்டது. சிறை நீக்கவந்த செங்கணானும் பொய்கையாரும் உடற் சிறையினின்றும் நீங்கிய அவரைக் கண்டு அலக்கணுற்றனர். பொய்கையார், "நண்பா!" என்றனர். அவர் ஆவியும் அகன்றது. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

முற்றிற்று.

மண்ணளந்தான் தங்கையுமை
மைந்தனெங்கோன்
மயிலேறும் பெருமாளை
வாழ்த்தாய் நெஞ்சே.

— உலகநீதி.

பிரணவப் பொருள்ஆம்
பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர்
தலைக்கணி வோமே.

— வெற்றிவேற்கை.

Wrapper Printed by
PARKER PRESS, MADRAS.1.